விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com

சங்கு 27
ஒலி 192 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 15 திங்கட்கிழமை (29.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## ஒழுங்குபடுத்தலில் பாரிய குறைபாடு குறிகாட்டுவானில் பக்தர்கள் தவிப்பு





(நயினாதீவு)

நயினாதீவு நாகபூசணி அம்மனின் தேர்த்திருவிழாவுக்கு நேற்றைய தினம் (28) சென்ற பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் பெரும் அசௌரியங்களை எதிர்கொண்டதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் நளிந்த அனலைதீவுக்கு விஜயம்



15ஆம் பக்கம் பார்க்க

## அதிகரிக்கும் காற்றின் வேகம் கொந்தளிப்புடன் கடல்

(கொழும்பு)

காங்கேசன் துறையிலிருந்து மன்னார், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 50-60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும்

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் இன்னும் மனிதப் புதைகுழி உண்டு



### மீண்டும் சோமரத்ன அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

செம்மணி சோதனைச் சாவடிக்கு அருகாமையில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு அருகிலும் நல்லூர் நோக்கிச் செல்லும் வீதியின் ஒரு பகுதியிலும் இன்னமும் கண்டறியப்படாத மனிதப் புதைகுழிகள் உண்டு என மரண தண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்ஷ அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தொல்புரத்தில் கத்திவெட்டுக்கு இலக்கானவர் உயிரிழப்பு

(அராலி)

தொல்புரம் பகுதியில் கடந்த 22ஆம் திகதி கத்திவெட்டுக்கு இலக்கான நபர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் ரகு துஷ்யந்தன் (வயது-39) என்பவரே உயிரிழந்தவராவார்.

16ஆம் பக்கம் பார்க்க

## முன்னைய ஆட்சியாளர்களின் ஊழல் மூடி மறைக்காமல் விசாரிக்கப்படும்

### அமைச்சர் ஆனந்த விஜேபால உறுதி



(கொழும்பு)

குற்ற இராஜ்ஜியத்தைக் கட்டியெழுப்புவதற்காகக் கடந்தகால ஆட்சியாளர்கள் செய்த சூழ்ச்சிகள் தற்போது அம்பலமாகத் தொடங்கியுள்ளன. இவை தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க






### செம்மணி மனிதப் புதைகுழி

## 427 தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டு அணையாவிளக்குப் போராட்டம்





15ஆம் பக்கம் பார்க்க

### அடையாள அட்டை இன்மையால்

## அரச உதவித்தொகை பெற முடியாத முதியவர்களுக்கு மாற்று ஏற்பாடு

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை (NIC) இல்லாத காரணத்தினால், அரசினால் வழங்கப்படும் மாதாந்த முதியோர் உதவித்தொகையைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ள குறைந்த வருமானம் கொண்ட முதியோருக்காக, விசேட அடையாள அட்டை வழங்கும் திட்டமொன்றை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டமானது கிராமிய வளர்ச்சி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலு

16ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோ.சைக்கிள்
## இளைஞர் இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் நேற்று இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு இளைஞர்கள் காய மடைந்துள்ளனர்.

இளைஞர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது, வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் சரிந்து விபத்துக்குள்ளானது.

விபத்தையடுத்து அப்பகுதி மக்கள் உடனடியாகச் செயற்பட்டு, காயமடைந்த இரு இளைஞர்களையும் மீட்டு சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர். (ந-7)

### நுளம்புகளை கட்டுப்படுத்துவதற்கான
# புகை விசிறல் நடவடிக்கை சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு

டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்படும் புகை விசிறல் செயல் முறையானது ஒரு வெற்றிகரமான நடவடிக்கை அல்லவென்றும் அதன் மூலம் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதாகவும் சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அச்சங்கத்தின் தலைவர் நஜித் சுமன சேன,

டெங்கு பரவலுக்கு மத்தியில் சுகாதார வைத்திய அதிகாரி (MOH) பிரிவுகளினால் புகை விசிறல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், டெங்கை ஒழிப்பதற்கான ஒரே தீர்வு அதுவல்ல.

நுளம்பு ஒன்றின் வாழ்க்கை வட்டத்தில் முட்டை, குடம்பி, கூட்டுப்புழு மற்றும் முதிர்ந்த நுளம்பு என நான்கு நிலைகள் காணப்படுகின்ற போதிலும், புகை விசிறல் மூலம் முதிர்ந்த நுளம்புகள் மட்டுமே அழிக்கப்படுவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும், ஒரு சுற்று புகை விசிறல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு 20 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமான பணம் செலவழிக்கப்படுவதுடன் இந்த பூச்சிக்கொல்லி நாசினிகள் காரணமாக நுளம்புகள் மட்டுமன்றி, சூழலுக்கு உகந்த மற்றும் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் தேனீக்கள் மற்றும் தட்டாரப்பூச்சிகள் போன்ற பூச்சியினங்களும் இறப்பதால் சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுவதாக நஜித் சுமன சேன சுட்டிக்காட்டினர். (ந-7)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்


### திருமதி வீரவாகு தெய்வானை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியை இன்று 29.06.2026 திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெறும். நாளை 30.06.2026 செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் சபிண்டீகரண கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெறவுள்ளதால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினருமாக வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(C-5945)


அம்பன், குடத்தனை. குடும்பத்தினர் 077 207 3042



கொரியக் குடியரசின் முன்னாள் வெளிவிவகார பிரதி அமைச்சரும் இலங்கைக்கான முன்னாள் கொரியத் தூதருமான ஜொங்-மூன் சோய் அவர்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையே கொழும்பில் சந்திப்பு இடம் பெற்றது.

இவ்வாண்டு இறுதியில் நடைபெறவுள்ள ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாடு (ICAPP) குறித்தும் ஆசிய நாடுகளிடையே கூட்டாண்மை மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டது. (ந-7)

## கண்ணீர் அஞ்சலி



மூத்த பத்திரிகையாளரும் வலம்புரிப் பத்திரிகையின் பருத்தித்துறை செய்தியாளராகப் பணியாற்றியவருமாகிய

### திரு. ஏ.என்.எஸ்.திருச்செல்வம்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். வலம்புரி நிர்வாகம்

பல ஆயிரம் கடந்த பதிவுகள்...
பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்
உங்கள்
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்


தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேரேறித் திருவீதி வலம்வந்தாள் நயினைத் தாயவள்



## ஜனாதிபதி அநுர பிரான்ஸ் விஜயம்



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை பிரான்ஸ் செல்ல உள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவின் பணிப்பாளர் நாயகம் பிரசன்ன பெரேரா தெரிவித்தார்.

இந்த முக்கியத்துவமிக்க விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உட்பட சில முக்கிய உயர் அதிகாரிகள் பங்கேற்க உள்ளனர். (ஙி)

### விபத்துக்களை ஏற்படுத்தும் சாரதிகளுக்கு

# அபராதங்களுக்கு பதில் நேரடிச் சட்ட நடவடிக்கை

### போக்குவரத்து பிரிவு அதிகாரிகளுக்கு பணிப்புரை

(கொழும்பு) ..............................

**நாட்டில் அதிகரித்து வரும் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக உடனடி அபராதங்களை விதிப்பதற்குப் பதிலாக, நேரடியாகச் சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.**

போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் ஜனவரி 1 ஆம் திகதி முதல் கடந்த வெள்ளிக்கிழமை வரையான காலப்பகுதியில் மாத்திரம் நாடு முழுவதும் 1,292 உயிரிழப்புகளை ஏற்படுத்திய வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. இந்த [illegible] ளினால் 1,357 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதே காலப்பகுதியில், 2,512 பாரதூரமான விபத்துகளும், 5,059 சிறிய விபத்துகளும் பதிவாகியுள்ளன.

உயிரிழந்தவர்களில் 467 பாதசாரிகளும், 465 உந்துருளி செலுத்துநர்களும் அடங்குவதாக பொலிஸ் தரவுகள் தெரிவிக்கின்றன.

[illegible] கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல் ஆகியவையே வீதி விபத்துகள் அதிகரிப்பதற்கான பிரதான காரணங்கள் என பொலிஸ் மா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஙி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தர்மமுழக்கம் துடுப்பாட்ட சமர்
# சமநிலையில் நிறைவு



தர்மமுழக்கம் என்று அழைக்கப்படும் கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரிக்கும் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்திற்கும் இடையிலான 9 ஆவது தர்மமுழக்கம் துடுப்பாட்ட தொடர் சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

தர்மபுரம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற குறித்த தொடரில் முதல் இன்னிங்சில் முதலில் துடுப்பெடுத்தாடிய தர்மபுரம் மத்திய கல்லூரி அணி 139ஓட்டங்களை பெற்ற நிலையில் அனைத்து இலக்குகளையும் இழந்தனர்.

பதிலுக்கு முதலாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய முழங்காவில் மகா வித்தியாலய அணியினர் 202ஓட்டங்கள் பெற்ற நிலையில் அனைத்து இலக்குகளையும் இழந்தனர்.

பதிலுக்கு இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த தர்மபுரம் மத்திய கல்லூரி 158 ஓட்டங்கள் பெற்ற நிலையில் அனைத்து இலக்குகளையும் இழந்தனர்.

95ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இன்னிங்சில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய முழங்காவில் மகா வித்தியாலய அணி 8 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவுக்கு வர போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரராக தர்மபுரம் மத்திய கல்லூரி வீரர் ஆர்.தமிழ்வானன், சிறந்த பந்து வீச்சாளராக முழங்காவில் மகா வித்தியாலய அணி வீரர் வி.சஞ்சயனும், தொடரின் சகல துறை வீரராக தர்மபுரம் மத்திய கல்லூரி வீரர் ஆர்.தமிழ்வானனும், சிறந்த களத்தடுப்பாளராக முழங்காவில் மகாவித்தியாலய அணி வீரர் எஸ்.அருட்செல்வனும் தெரிவு செய்யப்பட்டனர். (3-316)

## மாற்று வீரராக களமிறங்கி
# மெஸ்ஸி அசத்தல்
### ஜோர்டானை வீழ்த்தியது ஆர்ஜென்டினா



உலகக் கிண்ண கால்பந்து தொடரின் லீக் ஆட்டத்தில், ஆர்ஜென்டினா அணி, ஜோர்டானை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. தொடக்கம் முதலே இரு அணிகளும் விறுவிறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின. இருப்பினும், ஆர்ஜென்டினாவே ஆதிக்கம் செலுத்தியது.

ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் ஜியோவானி லோ செல்சோ கோல் அடித்து ஆர்ஜென்டினாவை 1-0 என்ற கணக்கில் முன்னிலைக்கு அழைத்து சென்றார்.

அதனைத் தொடர்ந்து 31 ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டினாவுக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. அதை லவுடாரோ மார்டினஸ் துல்லியமாக கோலாக மாற்றி அணியின் முன்னிலையை 2-0 ஆக உயர்த்தினார்.

இதனால் முதல் பாதி முடிவில் ஆர்ஜென்டினா 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

2 ஆவது பாதியில் முதல் கோலை தேடி ஜோர்டான் அணி தாக்குதல் ஆட்டத்தை தீவிரப்படுத்தியது. அதன் பலனாக, ஆட்டத்தின் 55 ஆவது நிமிடத்தில் மூசா அல்-தாமரி கோல் அடித்து ஜோர்டானின் கோல் கணக்கை தொடங்கி வைத்தார்.

இதையடுத்து ஆட்டத்தின் 60 ஆவது நிமிடத்தில் மாற்று வீரராக களமிறங்கிய நட்சத்திர வீரர் லியோனல் 80 ஆவது நிமிடத்தில் கோல் அடித்து அசத்தினார்.

இறுதியில், விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த லீக் ஆட்டத்தில் ஆர்ஜென்டினா 3-1 என்ற கோல் கணக்கில் ஜோர் டானை வீழ்த்தி 3 புள்ளிகளை கைப்பற்றியது. (3)

## அனல் பறக்கும் ஆட்டம் ஆரம்பம்
# நாக்-அவுட் சுற்றுக்கு தகுதி பெற்ற அணிகள் எவை தெரியுமா?



உலகக்கோப்பை கால்பந்து தொடரின் லீக் சுற்றுப் போட்டிகளில் வெற்றி, தோல்விகளைத் தாண்டி, யார் அடுத்த சுற்றுக்கு முன்னேறுவார்கள் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே ஏற்பட்டிருந்தது.

இந்த முறை 48 அணிகள் பங்கேற்றுள்ளதால், "ரவுண்ட் ஆஃப் 32" என்ற புதிய நாக்-அவுட் சுற்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நேற்று ஆரம்பமாகிய இந்த நாக்-அவுட் யுத்தத்திற்குத் தகுதி பெற்ற அணிகள் எவை, என்பது குறித்த முழுமையான பார்வையை இங்கே காணலாம்.

தொடரை நடத்தும் மெக்சிகோ, அமெரிக்கா, மற்றும் கனடா ஆகிய மூன்று நாடுகளுமே அடுத்த சுற்றுக்கு முன்னேறி அசத்தியுள்ளன.

கடந்த இரண்டு உலகக் கோப்பைகளிலும் லீக் சுற்றுடன் வெளியேறி அதிர்ச்சி அளித்த ஜேர்மனி, இம்முறை சிறப்பாகச் செயற்பட்டு அடுத்த சுற்றுக்குள் நுழைந்துள்ளது.

அத்துடன் சாம்பியன் ஆர்ஜென்டினா, லியோனல் மெஸ்ஸியின் சாதனை கோல்களுடன் கம்பீரமாக முன்னேறியுள்ளது.

கிலியன் எம்பாப்பேவின் அபார ஆட்டத்தால் பிரான்ஸ் அணியும், பலம் வாய்ந்த பிரேசில் அணியும் தங்கள் குழுக்களில் முதலிடம் பிடித்து அடுத்த கட்டத்திற்குள் நுழைந்துள்ளன.

இவர்களுடன், கொலம்பியா, சுவிட்சர்லாந்து, மொராக்கோ, ஜப்பான் ஆகிய அணிகளும் தங்கள் இடங்களை உறுதி செய்துள்ளன.


அத்துடன் தென்னாபிரிக்கா அணி, உலகக்கோப்பை வரலாற்றில் முதன்முறையாக நாக்-அவுட் சுற்றுக்குத் தகுதி பெற்று சரித்திரம் படைத்துள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணியர் ஆலயம்

## பதிவு இல:- HA/5/JA/463 திகதி 05.12.1988

## முதலாவது திருவெம்பாவை உபயகாரரும், 2 ஆம் திருவிழா அங்கத்தவரும் , மகா மண்டபத்திருப்பணிச் சபை அங்கத்தவரும்; பணிவான வேண்டுகோளும் அறிவித்தலும்




சித்தர்கள் வழிபட்ட வடக்கு நோக்கிய சிவன் ஆலயம் மரபுவழி மிருத்துஞ்ய வழிபாட்டுக்குச் சிறப்பு



ஆலய முகப்பு 2003 இற்கு முன்



தேர் திருப்பணி உபயம் நாகர்-தம்பர் (...1760...)



ஜோதி ஆச்சிரமம் ஸ்தாபகர் க.வே.செல்வஜோதி 1956

### வரலாறு

பொலிகண்டி கந்தவன ஆலய மகா மண்டபமானது 2 ஆம் திருவிழா உபயகாரர்களாகிய எம்மாலேயே மகா மண்டபத்திருப்பணிச்சபை தெரிவு செய்யப்பட்டு (i) (1974-1981) ஆகம விதிக்கு அமைவாக, முறையாக, வெளிப்படைத் தன்மையுடனும் வைரக் கல்லாம் வெள்ளைப் பொழிகல் அதே கற்களைப் பயன்படுத்தி மகா மண்டபத் திருப்பணி உபயமாக கட்டப்பட்டது.

(அப்போதைய ஒருவரது அதிக பட்ச திருப்பணி நிதி ரூபா 100/= எமது பேத்தியார் முதலாவது கட்டமாக ரூபா 60/= உம் இரண்டாம் கட்டமாக ரூபா 10/= உம் வழங்கியமை நினைவுடன்- மகா மண்டபத் திருப்பணிச் சபைக் கூட்டம் தெற்கு வாசல் முகப்பு மண்டபத்தில் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

பின்னர் (ii) (1997-2003) காலப் பகுதியில் "பழைய திருப்பணியைப் பழுது பார்த்து திருத்துதல் பன்மடங்கு புண்ணியம் என்பது சைவப் பேரறிஞர் இடித்துரைத்த பொன்மொழி" என 2 ஆம் திருவிழா நிர்வாக சபைத் தலைவர் (அமரர்.ம.ஆறுமுகம் அவர்களது நினைவு மலரில் குறிப்பிட்டபடி (பக்கம் 40, பிரிவு 6) மகா மண்டபப் புனரமைப்பும் தெற்கு வாசல் முகப்பு மண்டபமும் திருத்தப்பட்டது.

இம் மகா மண்டபத் திருப்பணி உபயத்திற்கு அமரர்.செ.சின்னையா அவர்களே "சங்கல்பம்" செய்து "உலகப் பெரும் சண்முகப்பெருமான் வீற்றிருக்கும் மகா மண்டப தூபிக்கான கலச அபிஷேகம் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளால் (1984) "இந்திரமயிலின் மீதமர்ந்த உலகப் பெரும் சண்முகப் பெருமான்" என விதந்துரைக்கப்பட்ட ஐம்பொன்னினாலான சண்முகப்பெருமான் 1928 ஆம் ஆண்டு "சைவப் பெரியார்" திக்கம் சி.செல்லையா பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் அனைத்துப் பிரதேச பக்தர்களின் தாலிக் கொடி உட்பட தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட நிதிப் பங்களிப்பில் ஆலய தெற்கு வாசல் முகப்பு மண்டபத்திலேயே வார்ப்பிக் கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஞானச்சுடர் - மார்கழி -2021 - கல்லில் உதித்த கருணாமூர்த்தியும் - இன, மொழி, சமயம் கடந்த இறைபக்திப் பரவச நிலையும்- சண்முகர் - பத்தர் பக்கம் -41- 43)

கலாபமயில் (உலகை வலம் வரப் பயன்படுத்திய இந்திரமயில் சூரசம்காரத்திற்கு முன்) சூரமயில் (சூரசம்காரத்தின் பின்) ஆகிய மூன்று மயில் வாகனங்களிற்கு அதிபதியான கந்தப் பெருமான் (கந்தவனக் கடவை 1803) (i) தற்போதைய மூலமூர்த்தி சண்முகர் (கும்பகோணத்திலிருந்து 1900- இன்று வரை) மூலஸ்தானம் திருப்பணி- (சைவப் பெரியார் முன்னோரும்...)

(பொலிகண்டி கந்தசுவாமிகோயில்- கந்தர் குமாரவேலர் கதிர்காமர்- சிதம்பரநாதன் மகன் கதிர்காமத்தம்பியும், கந்தர் அம்பலவாணர்- 1780 ஆம் ஆண்டு காலப் பகுதி- யாழ்.மாவட்டக் கோயில்களின் பதிவேடு- யாழ்.கச்சேரி.)

(ii) பழையவர் - (1900- இன்று வரை) பழைய மூலவர் (1658-1900) வரை மூலவராக சோழகால சண்முகர்- உடுப்பிட்டி சிவசம்புப் புலவரிற்கு கண்பார்வை வழங்கிய - புலவரின் உபாசனாமூர்த்தி "பொலிகண்டி கந்தவனம் திருவருள் மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி" (சிவசம்புப் புலவரின் பிரபந்தப் பெருந்திரட்டு) திருப்பணி உபயம் 9 ஆம் திருவிழா உபயகாரர்.

தஷ்ணகைலாச புராணம்-**(அ)** கந்தக் கடவுள்- மரக்கலமேறி "காங்கேயன்" துறை (மாவிட்டபுரம்)- கந்தவனம் - உகந்தமலை முருகன் ஆலயம் (அத்தியாயம் 9, பக்கம் 78-79)

**(ஆ)**- கந்தக் கடவுள் - மரக்கலமேறி குமாரபுரம் (இடிப்பு-1503-1658) தானியவாசம்(நெல்மூட்டையில்)- மரக்கல மேறி- பொலிகண்டி கந்தவனம் (1658- மூலவராக 1900 வரை பழையவராக -1990- இன்று வரை) 9 ஆம் திருவிழா உபயகாரர்களிற்கு "பழையவர் திருப்பணி" - TR/ 181 /19

மாவட்ட நீதிமன்றின் தீர்ப்பின் மூலம் உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது.

(உதயன் பத்திரிகை 20.06.2026-பக்கம் 6 ) குறிப்பிடத்தக்கது.

(iii) உலகப் பெரும் சண்முகர் (ஐம்பொன்- 1928- 2028 நூற்றாண்டை நோக்கி - மகா மண்டபத்திருப்பணி உபயமாக 2 ஆம் திருவிழா உபயகாரர்களே முன்பு போல (1974-1981, 1997-2003) மேற் கொண்டே ஆக வேண்டும்.

இலங்கையில் உள்ள ஆறுபடை வீடுகள் முருகன் ஆலயங்களில் ஒன்றாகவும்; "கற்பூரக் கந்தன்" எனும் பெருமையையும்; திருப்புகழ் பாடப் பெற்றதுமானதும் **போத்துக்கீசராலேயே இடிக்கப்படாதிருந்த வரலாற்றைக் கொண்ட இக் கந்தன் ஆலயம்** "கருங்கற் திருப்பணி" எனக் கூறிக் கொண்டு, இரு திருமஞ்சனக் கிணற்றினைக் கொண்டிருந்த நிலையில் அவற்றினையும், முற்றாக "தோண்டி எடுத்து" ஆகம விதிகள் பற்றிய அறிவுகளைக் கொண்டிராத நாம். மூலாயத்திற்கு 21.01.2019 ஆம் ஆண்டிலும் விநாயகப் பெருமானிற்கு 7 ஆண்டுகளின் பின்னரே 18.06.2026 அன்றும் அடிக்கல் நாட்டியுள்ளோம்.

இவ் இறை சந்நிதியில் "பிரித்தாளும் தந்திரங்கள்" "போட்டு கொடுத்தல்","போட்டுத்தள்ளுதல்"? போன்றவற்றினைப் புறந்தள்ளியும் முன்னிலையிலும் பருத்தித் துறை பிரதேச செயலாளரின் ஆலோசனையுடனும் முன்னிலையிலும் உரிய உத்தியோகத்தர்களுடன் இணைந்து வெளிப்படைத் தன்மையுடன் கூடிய திருப்பணிச் சபையினைத் தெரிவு செய்து தனித்தனி திருப்பணி செல்பவர்களிற்கு இட மளித்து பொருத்தமான திருப் பணியை அவர்களுடைய தலைமை ஆதீன கர்த்தா பதவிக்கு பாதிப்பு ஏற்படாதவாறு மேற் கொள்ள வேண்டுமென தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:- (i) "சைவப் பெரியார்" திக்கம் சி.செல்லையா பிள்ளை வீதி என திக்கம் - பொலிகண்டி வீதிக்கு பெயர் மாற்றம் செய்யுமாறு எம்மால் பருத்தித்துறை பிரதேச சபையிடம் எழுத்து மூலம் கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

(ii) இவ்வாறே திருப்பணிச்சபை தொடர்பில் (90 கோடி மதிப்பீடு-2018 இல்) வெளிப்படைத் தன் மையுடன் தெரிவு செய்துதவுமாறு பிரதேச செயலாளருக்கு எம்மால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

(iii) கோயிற் பொருட்களை எவ்வகை நியாயம் கருதியும் அழித்தோ, முறைகேடு செய்வோர் ஆலயத்தின் பெயரால் சிவனடியார்களின் சொத்துக்களை அபகரிப்பு செய்தவர்களாகவே கணிக்கப்படுவர்.

(சைவசமய சிந்தாமணி- சைவப்புலவர். தேசிகமணி கா.அருணாசலம்)

(iv) அடியேன் அரசபணியில் ஆத்ம திருப்தியாக:- யாழ்.அரச அதிபர் அமரர்.கே.கணேஸ், யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் அமரர்.செ.கனகசபாபதி, மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் ஆகியோருடன் இணைந்து பணியாற்றி வடமராட்சியில் படகுத் தொழிற்சாலைக்கென வடமராட்சி க.தொ.கூ.ச. சமாசத்தின் பெயரில் திட்டமுன்மொழிவு தயாரிக்கப்பட்டு நிதி விடுவிக்கப்பட்டு, அதற்கென பொருத்தமான காணி இனங்காணப்பட்டு நீர்வளைப்பிள்ளையார் கோயிலுக்குரிய ஆதனம், மேற்குறித்த சமாசத்திற்கு 99 வருடக்குத்தகை அடிப்படையில் ரூபா 3800,000/= (38 இலட்சம்) வழங்கப்பட்டு கட்டுமானப்பணி இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. விபரம் வருமாறு

தன்மை:- குத்தகை, உறுதி இல:- 13477, காணி:-01 (நீத்துவான் தெணி), திகதி:- 14.11.2005

ரூபா:- 3800,000/= , நொத்தாரிசு:- அ.க.நடராசா, நில அளவையாளர்:- வி.ர.தங்கமயில்,

வரைபட இல:- 2005.287, திகதி 12.11.2005,
காசோலை இல:- 701389 ஹற்றன் நஷனல் வங்கி, நெல்லியடி
மயில்வாகனம் யோகதாசன் (தத்துவகாரன்)
பார்பதி அம்மை செல்லையாபிள்ளை (ஆதீனகர்த்தா)

இச் சமாச நிதி மூலமே நீர்வளை விக்கினேஸ் வரப்பிள்ளையார் திருப்பணி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ஆலய ஆதனங்கள் எதுவும் நீதிமன்ற அனுமதி யின்றி அறுதி சாதனம் (விற்பனை) முடிக்க முடியாது. இந்த வகையிலேயே 99 வருட குத்தகையாக)

**தங்கராசா செல்வசோதி**
**077 567 0190**

**சிவன்கோவிலடி,**
**கந்தவனம், பொலிகண்டி,**
**வல்வெட்டித்துறை.**


(2462)

ஆலய நிதிகள், சட்டச் செலவாக விரயமாவதைத் தவிர்த்து அனைத்து திருவிழா- திருப்பணி உபய காரர்களின் அடிப்படை மனித உரிமைகளுக் மதிப்பளித்து தமது உரிமையைப் பாதுகாக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உயிராபத்துக்களை ஏற்படுத்தும் மரங்களை உடனடியாக அகற்றுமாறு கோரிக்கை

## சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ்



**(சாவகச்சேரி) ——————————————————————**

**சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியதாக காணப்படுகின்ற மரங்களை வீட்டு உரிமையாளர்கள் அகற்றி ஒத்துழைக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சபை எல்லைக்குள் பல இடங்களில் காணிகளுக்குள் நிற்கும் மரங்கள் வீதியை நோக்கி சாய்ந்தவண்ணம் இருக்கின்றன. அவற்றிலிருந்து விழுகின்ற தேங்காய், பனங்காய் போன்றவையும், அதே நேரம் மரத்தின் பாகங்களும் வீதியால் பயணம் செய்பவர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஏதுநிலை காணப்படுகின்றது.


எனவே, அவ்வாறு ஆபத்தை விளைவிக்கக்கூடிய நிலையில் காணப்படுகின்ற மரத்தின் பாகங்களை அகற்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அண்மையில் கூட இவ்வாறு ஒரே காணியிலிருந்த மூன்று பனை மரங்கள் சரிந்து வீதியில் விழக்கூடிய நிலையில் இருந்த வேளையில் சாவகச்சேரி நகரசபை, மின்சார சபை ஆகியன இணைந்து அதனைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்தி இருந்தது.

எனவே, இவ்வாறு ஆபத்தை விளைவிக்கக்கூடிய மரங்களை வீட்டு உரிமையாளர்கள் அப்புறப்படுத்தி, பொதுமக்களின் நலனைக் காக்க வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டிருந்தார். (3-30)

# காணி விடுவிப்பிற்காய் போராடும் மக்களோடு எப்போதும் துணை நிற்பேன்

## ரவிகரன் எம்.பி



(முல்லைத்தீவு)

இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு மக்களின் பூர்வீகக் காணி விடுவிப்பிற்காய் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்காக எப்போதும் துணைநிற்பேன் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, கேப்பாப்பிலவு மக்கள் தொடர் போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் நான்காவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கேப்பாப்பிலவு மக்களை பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் சனிக்கிழமை நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கேப்பாப்பிலவு பகுதியைச் சேர்ந்த 55 குடும்பங்களுடைய 59.5ஏக்கர் பூர்வீக வாழ்விடக் காணிகளும், 04குடும்பங்களுடைய 100 ஏக்கர் காணிகளுமாக மொத்தம் 54பேருக்குரிய 159.5 ஏக்கர் காணிகளும் விடுவிக்க வேண்டியுள்ளன. இவ்வாறு விடுவிக்கப்படாமலுள்ள தமது பூர்வீகக் காணிகளைவிடுவிக்குமாறு வலியுறுத்தியே, தற்போது மக்கள் மீண்டும் தொடர் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கேப்பாப்பிலவு மக்களின் காணிவிடுவிப்பு விடயம் தொடர்பில் நான் ஏற்கனவே ஜனாதிபதியுடன் பேசியிருக்கின்றேன். குறிப்பாக பாராளுமன்ற குழு அறையில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சினுடைய அமைச்சுசார் ஆலோசனைக்குழுக்கூட்டங்களில் இந்த விடயம் தொடர்பாக பல தடவைகள் வலியுறுத்தியிருக்கின்றேன்.

அந்தவகையில் ஜனதிபதியும் இந்துமக்களின் காணி விடுவிப்பு விடயத்தில் கூடுதல் கவனஞ் செலுத்த வேண்டும். கவனஞ் செலுத்துவார் என்றே நம்புகின்றோம்.

அந்த மக்களின் காணி இந்த மக்களுக்கே விடுவிக்க ப்பட வேண்டுமென்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

அத்துடன் கேப்பாப்பிலவு மக்களின் காணி விடுவிப்பிற்காக, எப்போதும் அந்த மக்களுடன் துணைநிற்பேன் என தெரிவித்திருந்தார். (3)

# மலேசிய ஆளுநர் இலங்கை வருகை

(கொழும்பு)

இலங்கை மற்றும் மலேசியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான பல தசாப்த கால வரலாற்று மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், மலேசியாவின் மலாக்கா மாநில ஆளுநர் துன் முகமட் அலி ருஸ்தாம் இன்று திங்கட்கிழமை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

மலாக்கா மாநிலத்திற்கும் இலங்கைக்குமிடையே பல நூற்றாண்டுகள் பழமையான வர்த்தக மற்றும். கலாசாரத் தொடர்புகள் காணப்படுகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு. இரு நாடுகளுக்குமிடையிலான சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது இந்த விஜயத்தின் முக்கிய நோக்கமாகக் கருதப்படுகிறது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 150 | 200 | 150 | 240 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | -- | 220 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 800 | 750 | 800 |
| தக்காளி | 850 | 800 | 800 | 620 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 200 | 150 | 250 |
| கோவா | 250 | 250 | 300 | 250 | 200 |
| கரட் | 350 | 400 | 450 | 380 | 400 |
| பூசணி | 120 | 140 | 150 | 100 | 160 |
| புடோல் | 150 | 150 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 150 | 140 | 100 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 300 | 300 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | -- | 200 |
| பாகற்காய் | 1900 | 2000 | 1500 | 1500 | 1400 |
| வெண்டக்காய் | 200 | 250 | 150 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 300 | 400 | 400 |
| பயற்றங்காய் | 400 | 250 | 400 | 450 | 400 |
| லீக்ஸ் | 400 | 400 | 500 | 350 | 400 |
| பீற்றூட் | 400 | 450 | 600 | 400 | 500 |
| கறிமிளகாய் | 450 | 500 | 500 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 500 | 500 | 600 |
| போஞ்சி | 650 | 550 | 600 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 200 | -- | 200 |
| கீரை – 1 பிடி | 150 | 60 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 600 | 400 | 500 | 350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 140 | 150 | 200 | 100-140 |
| இராசவள்ளி | 400 | 450 | 500 | 350 | 350 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 500 | 420 | 600 |
| முள்ளங்கி | 100 | 180 | 200 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 150 | -- | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | -- | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 150 | -- | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாண

# தேசிய ரீதியாக மாபெரும் போராட்டம்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் தீர்மானம்

**(யாழ்ப்பாணம்)**

**பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தேசிய ரீதியில் மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்க வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் தீர்மானித்துள்ளது.**



வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் அதன் உப தலைவர் அன்டனி ஆல்பர்ட் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது

அதன்போது, கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது டன் புதிய அரசாங்கமும் கடற்றொழில் அமைச்சரும் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கான எந்தவித தீர்வுகளையும் முன்வைக்காத நிலையில் தேசிய ரீதியில் மாபெரும் போராட்டம் ஒன்றியம் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுக் கூட்டத்தில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் கேமன் குமார, தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர்களும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். (3-33)

# பயன்பாட்டிற்கு தகுதியற்ற வாகனங்களை கண்டறியும் நடவடிக்கைகள் ஆரம்பம்

(கொழும்பு)

வீதி பயன்பாட்டிற்கு தகுதியற்ற வாகனங்களைக் கண்டறியும் விசேட சோதனை நடவடிக்கைகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, வீதி பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. பி.ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.

இந்தச் சோதனை நடவடிக்கைகள், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளுடன் இணைந்து முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை மலையகப் பகுதிகளில் இயக்கப்படும் வாகனங்கள் குறித்து இந்தச் சோதனை நடவடிக்கையின் போது விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

சோதனைக்கு உட்படுத்தப்படும் வாகனங்களில், வீதி பயன்பாட்டிற்கு தகுதியற்றவை என அடையாளம் காணப்படும் வாகனங்களை சேவையிலிருந்து நீக்கவும், அவை பொது வீதிகளில் இயக்கப்படுவதைத் தடுக்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவுள்ளனர். (நி)

## கிளிநொச்சியில் அதிரடி வீதி சோதனை

# 50 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் பறிமுதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறு விளைவிக்கும் வகையில், அதிவேகமாகப் பயணிக்கும் மோட்டார் சைக்கிள்களை கட்டுப்படுத்தும் நோக்கில் போக்குவரத்து பொலிஸாரின் விசேட அதிரடி வீதி சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வீதி விபத்துக்களை தடுப்பதையும், பாதசாரிகள் மற்றும் ஏனைய வாகன சாரதிகளின் பாதுகாப்பை உறுதிபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு ஜூன் மாதத்தில் மட்டும் அதிரடி சோதனையின் போது, பல்வேறு போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபட்ட சுமார் 30 இற்கும் அதிகமான அதிவேக சொகுசு மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இலக்கத் தகடுகள் இன்மை, வீதியில் செல்லும் பயணிகளுக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் முறையான சட்டப்பூர்வ ஆவணங்கள் இன்றிச் செலுத்தப்பட்டமை சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் அடங்குகின்றன.

பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் போக்குவரத்து விதிகளுக்கு முரணாகவும் செயற்படும் வாகன சாரதிகளுக்கு எதிராக இனிவரும் நாட்களிலும் இத்தகைய கடுமையான சட்ட நடவடிக்கைகள் தொடரும் என கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேபோல உரிய ஆவணங்கள் இல்லாமல் சட்ட விரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட சுமார் 20 இற்கும் அதிகமான டிப்பர் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் கிளிநொச்சி பொலிஸார் தெரி வித்துள்ளார்கள். (நி)

# 6 ஆம் தரத்துக்கு கல்வி மறுசீரமைப்பு அடுத்த வருடம் நடைமுறைப்படுத்த திட்டம்



(கொழும்பு)

2027ஆம் கல்வி ஆண்டு முதல் 6ஆம் தர மாணவர்களுக்கான புதிய கல்வி மறுசீரமைப்புகளை முழுமையாக நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத்குமாநாயக்கவின் தலைமையில் நடைபெற்ற கல்வி மறுசீரமைப்புகளின் முன்னேற்றம் குறித்த மீளாய்வுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதற்கென ஐந்து முக்கிய அம்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டு, அவற்றைச் செயற்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்குமாக விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2026ஆம் ஆண்டு முதலாம் தரத்தில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய கல்வி மறுசீரமைப்புகள் தற்போது வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வரும் நிலையில், அடுத்தகட்டமாக 6ஆம் தரத்துக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக, 6ஆம் தரத்துக்கான முதலாம் தவணைக்கான பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டு பூர்த்தியாகியுள்ளன.

நாட்டின் கல்வி உட்கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில், சுமார் 6,500 இரண்டாம் நிலைப் பாடசாலைகளுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் ஏற்கனவே வழங்கி முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், அபிவிருத்தி தேவைப்படும் 373 பாடசாலைகளைத் தரமுயர்த்தும் பணிகளும் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (நி)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ்
ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார்
அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண் கணிதம்
மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில்
தொடங்க, திருமணத் தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில்
பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை,
குழந்தைப் பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில். (C-5942)

074 196 4945, 076 682 7368

இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




## 03ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1967.03.21

மறைவு 2023.06.29

அமரர். நல்லநாதன் மகாலட்சுமி



எம்இனிய அன்னையே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்களது அன்பும், செயல்களும்
எமது நினைவுகளிலிருந்து நீங்கி விடமாட்டா
தங்கள் நினைவுகளோடு தான்
வாழ்கின்றோம்.
தங்களை என்றும் மறவோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(7915)

வசந்தன் குடியிருப்பு,
அன்னாநகர்,வவுனியா.

என்றும் உங்கள் நினைவுகளுடன்-கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொடிகாமத்தைச் சேர்ந்த
திரு.சின்னக்குட்டி காசிப்பிள்ளை
அவர்கள் சிறுகதை ஆக்க இலக்கியத்திற்காக கலாபூஷணம்,
யாழ் முத்து, கலைச்சாகரம், கலைமாமணி ஆகிய விருதுகளைப்
பெற்றமைக்குப் பாராட்டி வாழ்த்துகின்றோம்


வாழ்த்துவோர்: நண்பர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வெனிசுலாவில் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 18 நாள் குழந்தை மீட்பு





(கராக்கஸ்)

வெனிசுலாவில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கங்களால் கட்டடங்கள் சரிந்து விழுந்த நிலையில், இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 18 நாள் பச்சிளம் குழந்தை ஒன்று சுமார் 32 மணிநேரத்தின் பின் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தின் பின்னர் பதிவான மிக அரிதான மற்றும் வியக்கத்தக்க உயிர் பிழைப்புச் சம்பவமாக இது பார்க்கப்படுகிறது.

இடிபாடுகளுக்குள் நீண்ட நேரம் சிக்கியிருந்த போதிலும் குறித்த குழந்தைக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

குழந்தை மீட்கப்பட்டு சுமார் 90 நிமிடங்களின் பின்னர், அதே இடத்திலிருந்து குழந்தையினுடைய தாயாரும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட குழந்தை தனது தந்தையுடன் இணைந்த உணர்ச்சிகரமான காணொளி சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வருகிறது.

வெனிசுலாவில் கடந்த 24 ஆம் திகதி அந்த நாட்டு நேரப்படி மாலை சுமார் 6:04 அளவில் மிகவும் சக்திவாய்ந்த இரண்டு நிலநடுக்கங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்தன.

வெறும் 39 வினாடி இடைவெளியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கங்களில், முதலாவது 7.2 மெக்னிடியூட் ஆகவும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பின் அதிர்வு 7.5 மெக்னிடியூட் ஆகவும் பதிவாகியுள்ளன.

கடந்த நூற்றாண்டில் வெனிசுலாவைத் தாக்கிய மிக மோசமான இயற்கை அனர்த்தங்களில் ஒன்றாகக் கருதப்படும் இந்த நிகழ்வினால், தலைநகர் கராகஸ் மற்றும் லா குயிரா ஆகிய பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் தகவல்படி, இந்த நிலநடுக்கங்களால் சுமார் 70 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் பாதிப்பு குறித்த தரவுகள் மாற்றமடையக்கூடும். (நி)

## ஹார்முஸ் நீ...

## மீண்டும் ...

### பிரித்தானியாவுக்கு சொந்த...

### மீது தாக்...



(டெ...

ஹார்...

பிரித்தா...

ருள் பே...

முன்தி...

பினரா...

வெளிந...

இந்தத் தாக்குதலினால் கப்பலுக்குச் சிறிதளவு சேதம் ஏற்பட்டுள்ள போதிலும், அதில் இருந்த பணியாளர்கள் அனைவரும் எவ்வித ஆபத்துகளுமின்றி பாதுகாப்பாக உள்ளதாக பிரித்தானிய கடல்சார் வர்த்தக நடவடிக்கைகள் மையம் அறிவித்துள்ளது.

இதற்கு சில நாட்களுக்கு முன்னரும், ஹார்முஸ் நீரிணை ஊடாகப் பயணித்த

## பிரான்ஸை வாட்டி வதைக்கும் வெயில்

## ஏசி, மின்விசிறி கடைகளில் முண்டியடிக்கும் மக்கள்



(பாரீஸ்)

பிரான்ஸை வாட்டி வதைக்கும் வெயில் காரணமாக பலர் உயிரிழந்துள்ள நிலையில், மின்விசிறி மற்றும் ஏசி வாங்க மக்கள் கடைகளுக்கு படையெடுத்து வருகின்றனர்.

ஐரோப்பாவில் சீதோஷண நிலையில் பெரும் மாற்றம் நிகழ்ந்துள்ளது. கடும் வெப்ப அலையால் பல நாடுகள் கடும் பாதிப்பை சந்தித்துள்ளன. இத்தாலி, ஸ்பெயின் நாடுகள் கடும் உஷ்ணத்தில் சிக்கித் தவித்து வரும் சூழலில் பிரான்ஸூம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

வட பிரான்சில் அதீத வெப்பம் பதிவாகி இருக்கிறது. ஈபிள் கோபுரம், லூவர் அருங்காட்சியகங்களில் மக்கள் நடமாட்டம் வெகுவாக இல்லை. பல இடங்களில் வெப்பம் 104 டிகிரி பாரன்ஹீட்டை தாண்டி உள்ளது. இந்த வெப்பத்தை தாங்க முடியாமல் ஆறுகள், குளங்கள் மற்றும் நீர்நிலைகளை மக்கள் நாடி வருகின்றனர். அப்படி நீர் நிலைகளுக்கு சென்ற 55 பேர் மூழ்கி பலியாகியுள்ளனர்.

வெயில் காரணமாக கடைகளில், மின்விசிறிகள், ஏசிக்கள், ஏர் கூலர்களின் விற்பனையும் பல மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் கடைகளில் மக்கள் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது.

வெயில் காரணமாக பல்வேறு உடல்நல பிரச்சினைகளுடன் மக்கள் மருத்துவமனைகளுக்கு படையெடுத்து வருகின்றனர். இதனால், பாரீஸ் நகரில் மருத்துவமனைகள் நிரம்பி வழிவதாக அந்நகர பொலிஸ் கமிஷனர் தெரிவித்துள்ளார்.

வெப்பம் அதிகரித்து வருவதால் பொது வெளியில் மது அருந்துவதற்கு அதிகாரிகள் கட்டுப்பாடு விதித்துள்ளனர். இதனைத் தவிர்த்து 6 ஆயிரம் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன, பல கால்நடைகளும் வெயில் தாங்க முடியாமல் உயிரிழந்துள்ளன. (நி)

## செஷல்ஸ்...

### மோடிக்கு உற்சா...

(விக்டோரியா)

கிழக்கு ஆபிரிக்க தீவு நாடான செஷல்ஸ்க்கு அரசு முறை பயணமாக சென்ற இந்தியப் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

செஷல்ஸ் ஜனாதிபதி பேட்ரிக் ஹெர்மனி, விமான நிலையத்திற்கு நேரில் வந்து, மோடியை ஆரத்தழுவி வரவேற்றார்.

இதையடுத்து இரு நாட்டு தலைவர்களும் விக்டோரியாவில் உள்ள தேசிய தாவரவியல் பூங்காவுக்கு சென்றனர். அங்கு ராட்சத ஆமைகள் பாதுகாப்பு மையத்தை பார்வையிட்ட பிரதமர் மோடி, புகழ்பெற்ற, "அல்டாப்ரா" வகை ராட்சத ஆமைகளுக்கு உணவளித்து மகிழ்ந்தார்.

இதைத் தொடர்ந்து இரு நாட்டு தலைவர்களும், "தாயின் பெயரில் ஒரு மரம்" என்ற திட்டத்தின் கீழ் மரக்கன்று நடும் விழாவில் பங்கேற்றனர்.

இதற்காக செஷல்ஸ் நாட்டின் தேசிய இலச்சினையில் இடம்பெற்றுள்ள அந்நாட்டின் தனித்துவமிக்க, "கோகோ டி மெர்" என்ற பனை வகை மரக்கன்றை பிரதமர் மோடியும், ஜனாதிபதி பேட்ரிக் ஹெர்மனியும் நட்டனர்.

இது குறித்து தன் சமூக வலைதளத்தில் பதிவிட்ட பிரதமர் மோடி, "பூமியில் வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...நீரிணையில்

# ...பதற்றம்!

## ...தமான எரிபொருள் கப்பல்

## ...க்குதல்

(...டஹ்ரான்)

...ஹார்முஸ் நீரிணை ஊடாகப் பயணித்த ...தானியாவுக்குச் சொந்தமான எரிபொ... போக்குவரத்து கப்பல் ஒன்றுக்கு நேற்று ...தினம் அடையாளம் தெரியாத தரப்...பால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ...ரிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சிங்கப்பூருக்குச் சொந்தமான எரிபொருள் கப்பல் ஒன்றின் மீதும் இதே போன்றதொரு தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், அமெரிக்க அதிகாரிகளால் ஈரானில் உள்ள சில இலக்குகள் மீது வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)



# வெனிசுலா நிலநடுக்கம்

## பலி எண்ணிக்கை அதிகரிப்பு

(கராக்கஸ்)

வெனிசுலா நிலநடுக்கங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

வெனிசுலாவில் கடந்த 25 ஆம் திகதி அதிகாலை 3 மணிக்கு ரிக்டர் அளவுகோலில் 7.2 மற்றும் 7.5 என இரு சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் பதிவாகின. தொடர்ந்து மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன.

நிலநடுக்கங்களில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், வெனிசுலா நிலநடுக்கங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,430 ஆக உயர்ந்துள்ளது. ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டின் இடைக்கால ஜனாதிபதி டெல்சி ரோட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார்.

நாடுமுழுவதும் அவசரநிலை பிறப்பிக்கப்படுவதாக அறிவித்த இடைக்கால ஜனாதிபதி டெல்சி ரோட்ரிக்ஸ், மக்கள் அனைவரும் விழிப்புடனும் பாதுகாப்புடனும் இருக்கவேண்டும் என தெரிவித்தார்.

முன்னதாக மீட்புப் பணிகள் நடந்து வரும் நிலையில் வெனிசுலாவில் மீண்டும் 4.9 ரிக்டர் அளவுகோலில் நேற்று முன்தினமும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை.

சக்திவாய்ந்த நிலநடுக்கங்களுக்குப் பிறகும் தொடர்ந்து நிலநடுக்கம் ஏற்பட்டதால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர். (நி)

# ...ஸ் தீவில்

## ...சாக வரவேற்பு



...உயிரினங்களிலேயே, 200 ஆண்டுகளுக்கு மேல், நீண்ட ஆயுள் கொண்டதாக, 'அல்டாப்ரா' ராட்சத ஆமைகள் விளங்குகின்றன" என குறிப்பிட்டு உள்ளார்.

முன்னதாக, "ஜோனதன்" எனப்படும், ...194 வயதுடைய உலகிலேயே மிக பழமையான ஆமைக்கு பிரதமர் மோடி இந்த தாவரவியல் பூங்காவில் உணவளித்து மகிழ்ந்ததாக தகவல்கள் வெளியாகின.

"ஜோனதன்" ஆமை மேற்கு ஆபிரிக்காவின் பிரிட்டிஷ் தீவுப் பகுதியான செயின்ட் ஹெலனாவீல் உள்ள உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வருகிறது. (நி)

# போர் நிறுத்தம் மீறப்பட்டால்

## ஈரான் என்றொரு நாடே இருக்காது

## ட்ரம்ப் சூளுரை



(வோஷிங்டன்)

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீண்டும் மீறியதற்காக ஈரான் மீது தாக்குதல்களைத் தொடரப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக தனது ட்ரூத் சோஷியல் தளத்தில் கருத்து தெரிவித்துள்ள ட்ரம்ப், போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீண்டும் மீறியதற்காக, ஈரானின் ஏவுகணை மற்றும் ட்ரோன்கள் மற்றும் கடலோர ரேடார் தளங்கள் மீது அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

நாம் இனிமேலும் நியாயமாக நடந்துகொள்ள முடியாத ஒரு நிலை வரலாம். அப்போது நாம் மிகவும் வெற்றிகரமாகத் தொடங்கிய பணியை இராணுவ ரீதியாக முடிக்க நிர்பந்திக்கப்படுவோம். அப்படி நடந்தால், ஈரான் என்ற ஒரு நாடே இருக்காது." என குறிப்பிட்டுள்ளார்.

ஹார்முஸ் ஜலசந்திக்கு அருகே எண்ணெய் கப்பல் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, ட்ரம்பின் உத்தரவின் பேரில் ஈரான் மீது அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தியது.

எண்ணெய் கப்பல் மீது ஈரான் நடத்திய ட்ரோன் தாக்குதலுக்குப் பதிலடியாக, அமெரிக்க இராணுவ விமானங்கள் ஹார்முஸ் ஜலசந்தியிலும் அதன் அருகிலும் உள்ள பல இடங்களில் 10 ஈரானிய இராணுவ இலக்குகளைக் குறிவைத்ததாக அமெரிக்க மத்தியப் படை தலைமையகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நடனத்தால் உலக சாதனை படைத்த கிளிநொச்சி சிறுமி



(கிளிநொச்சி)

கிளிநொச்சியைச் சேர்ந்த சிறுமி ஒருவர் நடனத்தால் உலக சாதனை படைத்துள்ளார்.

கவிஞர் ரஜீவனின் மகளான ரஜீவன் கம்சத்வனி என்ற சிறுமியே 6 வயதுக்குட்பட்ட பிரிவில் இந்த உலக சாதனையை நிலைநாட்டினார்.

குறித்த நிகழ்வு நேற்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சியில் உள்ள தனியார் விருந்தகம் ஒன்றில் நடைபெற்றது.

2 மணி 30 நிமிடம் தொடர்ச்சியாக பரத நாட்டியம் ஆடி குறித்த சிறுமி உலக சாதனையை நிகழ்த்தினார்.

குறித்த சாதனையானது, ராபா உலக சாதனை புத்தகத்தில் இன்று பதிவு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நிகழ்வின் இறுதியில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸ்வரன் அவர்களால் "உலக நாட்டிய இளவரசி" என்று மகுடம் சூட்டி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ராபா உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கை நாட்டுத் தூதுவர் கலாநிதி யோகதாசன் யூட் நிமலன், ராபா உலக சாதனை புத்தக நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட தலைவர் கலாநிதி சிவனேஸ்வரன் விஜிதா ஆகியோர் நடுவர்களாக பங்குபற்றினர். (3-100)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1985- இந்து
நட்சத்திரம்:சுவாதி
12 இல் செவ்
கி-பா-24 1/2
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: TO(Gov)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16995

பிறப்பு:1990-இந்து
நட்சத்திரம்:சதயம்
கி-பா-22
உயரம்:5'4"
தகைமை/தொழில்- A/L,London
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16996

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்:ரேவதி
கி-பா-8
8இல்சூரிசெவ்
உயரம்:6"
தகைமை/தொழில்: IT Degree,IT work(Newzealand)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16998

பிறப்பு: 1988- இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி-பா-19
2இல் செவ்
உயரம்:5'4"
தகைமை/தொழில்-DRAUGHTMENT, Teacher(pvt)
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/16999

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
1இல்செவ் உயரம்:5'6"
தகைமை/தொழில் :Computer Designer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/17000

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BMsc,Master Degree,Physiotherapist(Aus)
எதிர்பார்ப்பு: only Australia
தொ.இ: G/16997

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்:சதயம்
கி-பா-13
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:College,Teacher
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/16938

பிறப்பு-1996-NRC
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B. pharm, MBA, MSC, Pharmacist
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/16940

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
7இல்செவ்
உயரம்: 5'
தகைமை/தொழில்-Degree, DO
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ : G/16943

பிறப்பு-1996 - இந்து
நட்சத்திரம்-பூசம்
10இல்சூரிசெவ்
கி-பா- 30 3/4
உயரம்: 5'2"
தகைமைதொழில்: BSC,Work(pvt)
எதிர்பார்ப்பு - உத்தியோகம்
தொ.இ: G/16946

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 604

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## தேர்வு எழுதுவது எப்படி

இந்தக் காலத்துப் பையன் எதுக்கும் பயப்பட மாட்டான். ஆனால் ஒரு விடயத்துக்குப் பயப்படுவான். என்ன அது? பரீட்சைதான்! வேறு என்ன? தேர்வு நெருங்க நெருங்க பரீட்சை ஜுரமே வந்துடும் சிலபேருக்கு. படிக்காமலே இருந்தால்தான் பரீட்சை பயமுறுத்தும் ஆரம்பத்தில் இருந்தே நன்றாக படித்துக் கொண்டு வந்தால் கடைசி நேரத்தில் பரீட்சையைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியமே இருக்காது! சரி... இப்போது பரீட்சை வந்துவிட்டது! அதை நல்ல விதமாக எழுதுவது எப்படி? அதுக்குச் சில ஆலோசணைகளை சொல்லியிருக்கிறார்கள் பெரியவர்கள். படிக்கிற பிள்ளைகள் இதைத் காதில் வாங்கி வைத்துக் கொள்வது நல்லது. 10 மணிக்கு பரீட்சை ஆரம்பம் என்றால் 8 மணிக்கே எல்லா பாடங்களையும் ஒரு தடவை புரட்டிப் பார்ப்பது நல்லது.

பரீட்சை எழுத பள்ளிக்கூடம் செல்கிறார்கள், அப்போது உங்களுக்கு வீட்டிலே யார்மேலே மிகவும் பிரியமோ அல்லது யாருக்கு உங்கள் மேலே மிகவும் பிரியமோ அவர்களிடம் சொல்லிவிட்டு செல்லுங்கள். அரை மணிநேரத்துக்கு முன்னரே அங்கே போய் விடுங்கள். கடைசி நேரத்தில் அரக்கப் பரக்க ஓடி இடத்தைத் தேடி நம்பரைத் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்காதீர்கள். பரீட்சை எழுதுவற்கு முன்னர் வெளியே நின்று கொண்டிருந்த மற்றவர்களிடம் பாடத்தைப் பற்றி சந்தேகம் கேட்டுக் கொண்டிருக்காதீர்களா. சில சமயம் அது குழப்பமாகப் போய்விடும்! உங்களுக்குத் தெரிந்தது உங்களோடு இருக்கட்டும். அவர்களுக்குத் தெரிந்தது அவர்களோடு இருக்கட்டும்.

பத்து நிமிடத்துக்கு முன்னரே தேர்வு அறைக்குள்ளே நுழைந்து விடுங்கள் தெரிந்தோ தெரியாமலோ உங்கள் சட்டைப்பைக்குள்ளே ஏதாவது காதிதத்துண்டு இருந்தால் தூக்கிப் போட்டு விடுங்கள்! அது என்னத்துக்கு? மணியடிப்பதற்கு முன்னரே வேண்டுமென்றால். அறையை சுத்தி நோட்டம் விடலாம்... யார் யார் எங்கே இருக்கிறார்கள் என்று பார்க்கலாம் மணியடித்த பிறகு சுந்தரம் எங்கே இருக்கிறான் சோமு எங்கே உட்கார்ந்திருக்கான என்று பார்த்துக் கொண்டிருந்தீர்கள் என்றால் நேரம் வேஸ்ட்! நிதானமாக ஒரு தடவை கண்ணை மூடி படித்ததை நினைத்துப் பாருங்கள். விடைத்தாள் கொடுத்தவுடனே அதைக்கவனமா பூர்த்தி செய்யுங்கள். உங்க நம்பரை உரிய இடத்தில் எழுதுங்கள். தேர்வாளர் கையொப்பம் விடைத்தாளில் இருக்கா?என்று உறுதிப் படுத்திக்கொள்ளுங்கள்.

வினாத்தாள் கொடுத்தவுடன் நிதானமாக அதிலே உள்ள குறிப்புகளைப் படியுங்கள். எத்தனை கேள்விக்குப் பதில் எழுதச் சொல்லியிருக்கிறார்கள். எத்தனை கேள்விக்குப் பதில் தெரியும். என்று முடிவு பண்ணிக் கொள்ளுங்கள். தெரியாத கேள்வியைப் பத்தி மனசை அலட்டிக் கொள்ள வேண்டாம்! எந்தக் கேள்விக்கு நல்லா பதில் எழுதத் தெரியுமோ அந்தக் கேள்விக்கு முதலில் பதில் எழுதுங்கள்'. முதல் இரண்டு மூன்று பக்கம் கொஞ்சம் நிறுத்தி நிதானமாக அழகாக எழுதுங்கள். அதற்குப்பிறகு நேரத்துக்குத் தகுந்த மாதிரி பாருங்கள். எழுதி முடித்ததும் அந்தக் கேள்வியிலே டிக்மார்க் பண்ணிக கொள்ளுங்கள். இந்தக் கேள்விக்கு இவ்வளவு நேரம் என்று ஒதுக்கி அந்த நேரத்தில் பதில் எழுத வேண்டும். கேள்விக்குத் தகுந்த பதில் போதும். உங்களுக்கு நிறையதெரியும் என்பதால் தெரிந்ததையெல்லாம் வளவள என்று எழுதக் கூடாது.

பதில் எழுதும்போது தொடர்ச்சியாக எழுதிக் கொண்டே போகக் கூடாது. சின்னச் சின்னப் பிரிவாக பிரித்து எழுத தாராளமாக மார்ஜின் விட வேண்டும். ஒரே கேள்விக்கு இரண்டு இடத்தில் பதில் எழுதக்கூடாது!. இப்படிச் சிலபேர் எழுதுவதுண்டு. திருத்துபவர்கள் ஏமாந்து போய் மார்க் போடுவார்கள் என நினைத்து. அப்படியெல்லாம் ஏமாற மாட்டார்கள். அதிகப்படியாக விடைத்தாள்கள் (Additional Sheets) வாங்கும் போது உங்கள் நம்பர், பக்கமெல்லாம் சரியாக போட வேண்டும். தேர்வாளர் கையொப்பம் எல்லாம் இருக்கிறதா என சரி பார்க்க வேண்டும் இணைத்தாள்களிலும்

முதலில் தெரிந்த கேள்விக்கெல்லாம் பதில் எழுதுங்கள்! பிறகு, தெரியாத கேள்வியாக இருந்தாலும்... உங்களுக்குத் தெரிந்த அளவுக்குப் பதில் எழுதுங்கள்.. அதை விட்டு விட வேண்டாம். எல்லாம் எழுதி முடிந்த பிறகு, கடைசியாக ஒருதரம் சரிபாருங்கள். கால்புள்ளி அரைப்புள்ளி விடுபட்டிருந்தால் அதையெல்லாம் வைக்கலாம். கேள்விநம்பர்-பக்கம் நம்பர் எல்லாம் சரியாக இருக்கா என்று பாருங்கள். மணியடித்ததும் நிதானமாக விடைத்தாளைக் கொடுத்திட்டு வெளியில் வாருங்கள். வீட்டுக்குப் போனவுடன் அடுத்த பரீட்சைக்கான புத்தகங்களை எடுத்து வச்சிக்கிட்டு உட்கார்ந்து விடாதீர்கள்.. ஒரு மணி நேரமாவது ஓய்வு எடுத்துக்குங்க அதற்குப்பிறகு அடுத்த பரீட்சைக்குப் படிக்கலாம். ஒரு பரீட்சையில் நிறைய மார்க் வாங்கிய இரண்டு பையன்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருத்தன் சொன்னான்:

வீட்டில் படிக்கும் போது எனக்கு ஏதாவது பாடத்தில் சந்தேகம் வந்தால் உடனே அப்பாவைக் கேட்டு செய்வேன். அதனால் தான் அதிக மார்க் வாங்க முடிந்தது! அப்படி என்றான். அதுக்கு இவன்: "எனக்கு பாடத்தில் சந்தேகம் வந்தால் உடனே எங்கப்பாவிடம் கேட்க மாட்டேன். அதனால் தான் அதிக மார்க் வாங்க முடிந்தது!" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தரிசனம் 02

XXXi

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்

புருசோத்தமன்



(26.06.2026 தொடர்ச்சி)

தமிழ் இனம்-தமிழ் மொழி என்பதை இலக்காகக் கொண்டு நம் விடுதலைப் போராட்டம் இடம்பெற்றாலும் சிங்களவர்கள் சிங்கள மொழி என்பதை விட, பௌத்தத்திற்கே முன்னுரிமை கொடுத்தனர்.

அதனாலேயே இலங்கையை அவர்கள் பௌத்த சிங்கள நாடு என்கிறார்கள்.

உண்மையில் சிங்கள மொழிக்கே அவர்கள் முன்னுரிமை கொடுத்திருப்பார்களாயின், சிங்கள பௌத்த நாடு என்று தான் கூறியிருக்க வேண்டும்.

ஆக, மொழி என்பது அவர்களுக்கு இரண்டாம் பட்சமே.

ஆம், சிங்கள மொழியை அவர்கள் தங்களின் உயிராக மதித்திருந்தால், கடந்த கால இனக்கலவரங்களின் போது, சிங்களம் பேசவல்ல தமிழர்களை அவர்கள் பாதுகாத்திருப்பார்கள். ஆனால் அது நடக்கவில்லை.

உண்மையில் தென்பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்களில் 99 சதவீதமானவர்கள் சிங்கள மொழியைச் சரளமாகப் பேசவல்லவர்கள்.

அப்படியிருந்தும் அதனை பேரினவாதிகள் இம்மியும் பொருட்படுத்தவில்லை.

மாறாக, சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்றவர்களாக இருந்திருந்தால், நிச்சயம் அவர்களை பௌத்தத்தின் பேரால் சிங்களவர்கள் தீண்டாமல் தவிர்த்திருப்பர்.

அதேவேளை தமிழ் பௌத்தர்கள் என்ற வகையினர் இருந்திருக்கும் பட்சத்தில், பௌத்த பிக்குகளாக தமிழர்களும் இருந்திருப்பர்.

ஆம், ஒரு காலத்தில் தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் நம் மத்தியில் உண்டு.

முல்லைத்தீவில் உள்ள சில பௌத்த அடையாளங்கள் மற்றும் கந்தரோடையில் உள்ள பௌத்த எச்சங்கள் தமிழ்ப் பௌத்தர்கள் இருந்ததற்கான சான்றாகும்.

ஆயினும் நம் மத்தியில் தமிழ்ப் பௌத்தம் இல்லாது போனதன் காரணங்கள் பற்றிய ஆய்வுகள் இன்னமும் பேசாப்பொருளாகவே உள்ளன.

ஆம், ஈழத்தமிழர்களில் பௌத்தத்தைப் பின்பற்றியவர்களும் இருந்தனர் என்பதைக் கூறுவதற்கு தமிழர்களாகிய நம் தயாரில்லை.

சிங்களவர்கள் நம் இனத்திற்குச் செய்த கொடுமைகள் காரணமாகவும் தமிழ் பௌத்தர்கள் இருந்தார்கள் என்று கூறுவதைச் சாட்டாக வைத்து, பௌத்த சிங்களவர்கள் நம் மண்ணை ஆக்கிரமித்து விடுவார்கள் என்ற பயத்தாலும் ஓர் உண்மை உறங்கிக் கொண்டிருக்கிறது.

ஆனால் இங்கு ஓர் விடயத்தை நாம் கூறியாக வேண்டும்.

அதாவது தமிழர்களில் பௌத்தர்களும் இருந்தார்கள் என்ற உண்மையை பௌத்த சிங்களவர்கள் அறிந்திருந்தாலும் அதனை அவர்கள் ஒருபோதும் கூறவோ, வெளிப்படுத்தவோ இல்லை.

தமிழர்களில் ஒரு பகுதியினர் பௌத்த மதத்தைப் பின்பற்றினர் எனக் கூறும் போது, தமிழர் தாயகத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கக்கூடிய பௌத்த எச்சங்கள் தமிழ்ப் பௌத்தர்களுடையதென்பதாகி விடும்.


எனவே தமிழ்ப் பௌத்தர்கள் இருந்தார்கள் என்று கூறுவதைத் தவிர்ப்பதன் மூலம் வடக்குக் கிழக்கில் உள்ள பௌத்த அடையாளங்களை தங்களுக்குரியதாக ஆக்குவதில் பௌத்த பேரினவாதம் மிகவும் உறுதியாக உள்ளது.

உண்மை. இஸ்லாமியர்கள் மதம் மாற்றும் போது, கிறிஸ்தவர்கள் மதமாற்ற சபைகளை இங்கு இயக்கும் போது, பௌத்த சிங்களவர்கள் எதற்காக தமிழர்களை பௌத்த மதத்திற்கு மாற்றவில்லை என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

இங்குதான் இலங்கை பௌத்த நாடு எனக் கூறுகின்ற சிங்களவர்கள் பௌத்தம் சிங்களவர்களுடையதாக இருக்க வேண்டும் என்பதிலும் உறுதியாக உள்ளனர்.

இதனாலேயே தமிழர்களை அவர்கள் பௌத்த மதத்திற்கு மாற்றம் செய்யாமல் தவிர்த்தனர்.

எதுவாயினும் இந்து மதப் பின்னணியைக் கொண்ட பௌத்தம் உலக நாடுகள் சிலவற்றில் பரவியிருந்தாலும் உலக நாடுகளில் இருக்கக்கூடிய பௌத் தர்களின் தாய்மொழி சிங்களம் அல்ல என்பது இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.



எதுவாயினும் இந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் இருக்கக்கூடிய பௌத்த சிங்களவர்கள் மதமாற்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தால், தென்பகுதியில் வாழும் கணிசமான தமிழர்கள் பௌத்த மதத்தைத் தழுவியிருப்பார்கள்.

ஆனால் அவர்கள் மதமாற்றத்தைச் செய்யாததன் காரணமாக நம் சைவத் தமிழர் தம் தாய்ச் சமயத்தோடு இருக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டதெனலாம்.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 மில்லியனுக்கும் அதிகமானோருக்கு TIN எண்கள் வழங்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கையில் இதுவரை 12 மில்லியனுக்கும் அதிகமான வரி செலுத்துவோருக்கு வரி செலுத்துவோர் அடையாள எண்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் நிஷாந்த ஜயவீர தெரிவித்துள்ளார்.

சுமார் ஐந்து மில்லியன் மக்கள் தங்களுக்கான வரி அடையாள எண்களைப் பெறுவதற்காகக் காத்திருக்கின்றனர்.

உள்நாட்டு வருவாய் திணைக்களம் வரி அடையாள எண்களை விண்ணப்பதாரர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கும் நடைமுறையை இதுவரை மேற்கொள்ளவில்லை. இதனால், தங்கள் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதை அறிய முடியாமல், வரி செலுத்துவோர் பெரும் குழப்பத்திற்கும் சிரமத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.

தங்களது வரி அடையாள எண் நிலையை அறிந்துகொள்ள விரும்புவோர், உள்நாட்டு வருவாய் திணைக்களத்தின் உத்தி யோகபூர்வ இணையத்தளத்திற்குச் சென்று, தமது தேசிய அடையாள அட்டை எண்ணைப் பயன்படுத்திச் சரிபார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

# மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டிகள் மன்னார் கல்வி வலயம் முதலிடம்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுனர் போட்டியில் மன்னார் கல்வி வலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து 5 நாட்கள் நடைபெற்றது.

இதில் நடைபெற்று முடிந்த மெய்வல்லுனர் போட்டி முடிவுகளின் அடிப்படையில் மன்னார் கல்வி வலயம் 797.8 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் யாழ்ப்பாணக் கல்வி வலயம் 613.5 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் வலிகாமம் கல்வி வலயம் 467 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (3-90)

# 50 பேரில் ஒருவர் போதைக்கு அடிமை

## அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ்



(கொழும்பு)

இலங்கையில் 50 பேரில் ஒருவர் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான தினத்தை முன்னிட்டு, புனர்வாழ்வு பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "முழு நாடும் ஒன்றாக" தேசிய போதைப்பொருள் ஒழிப்பு பேரணியில் கலந்து கொண்டதன் பின்னர் உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை போதைப் பொருளுக்கு இரையாவதன் காரணமாக இந்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள தாய்மார்களும் பெண்களும் பாதிக்கப்படுகின்றனர். பிள்ளைகளின் கல்வி சீர்குலைந்து அவர்களின் வாழ்க்கையே இருண்டு போகிறது.

இந்த மாபெரும் பேரழிவிலிருந்து நாட்டை மீட்பதற்கு பாரிய கூட்டு முயற்சி தேவை. இதற்கிடையில், போதைப் பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளுடன் தொடர்புடையதாக சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட கைதுகளின் மூலம் அரசியல் பின்னணிகளுக்கும் போதைப் பொருள் குற்றங்களுக்கும் இடையே உள்ள தொடர்புகள் வெளிப்பட்டு வருகிறது.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளை விடுவிப்பதற்காக கோடிக்கணக்கில் இலஞ்சம் கொடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

அன்று அத்தகையதொரு அரசியல் கலாசாரமே காணப்பட்டது. குற்றவியல் நாடொன்றை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தற்போது வெளிப்பட்டு வருகிறது. இந்த குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என அவர் தெரிவித்தார். (நி)

# நீர் நிலைகளில் நீராடும் போது அவதானத்துடன் செயற்படுங்கள்

(கொழும்பு)

பொசன் பண்டிகை காலப் பகுதியில் நீர்நிலைகளில் ஏற்படும் உயிரிழப்புகளைத் தவிர்ப்பதற்காக பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸ் அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வூட்லர், இந்த ஆண்டில் இதுவரை சுமார் 75 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகவும், எனவே நீர்நிலைகளில் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொசன் பண்டிகையை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதோடு, சுமார் 10,000 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நீர்நிலைகள் மற்றும் மக்கள் கூடும் இடங்களில் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் இடையூறுகளைக் கட்டுப்படுத்த விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், ஆறுகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்வீழ்ச்சிகளுக்குச் செல்லும் போது எச்சரிக்கைப் பலகைகளைப் பின்பற்றுமாறும், உயிர்காக்கும் பொலிஸாரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போதைப்பொருள் அல்லது மது அருந்திவிட்டு நீரில் இறங்குவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி)

# மாகாணமட்ட தடகளத்தில் சாதித்த யாழ்.வீரர்கள்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.


இதில் 16 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த வி. தருண் 42.41 மீற்றர் தூரம் எறிந்து வர்ணச்சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தையும் முல்லைத்தீவு வள்ளிபுனம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆர். சந்தோஷ் 41.53 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த யு. மிதுஷன் 37.45 மீற்றர் தூரம் எறிந்து வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் முல்லைத்தீவு மாவிலங்கேணி ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த ஏ. அஸ்வின் தங்கப் பதக்கத்தையும் மன்னார் சென் சேவியர் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த சி. கிமான்ஸ் றோகன் வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் முருகன் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜெ. அருள்நாதன் வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியைச் சேர்ந்த எஸ். நிதன்ராஜ் 3.40 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் யாழ் மத்திய கல்லூரியைச் சேர்ந்த கியூ. சகீவன் 3.30 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியைச் சேர்ந்த எம். மயூரிகன் 3.20 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.media

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செல்லச்சொல்லா தார்.

– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொதுமக்கள் பதில் நடவடிக்கை எடுக்காதவரை விபத்துக்களை...

நம் மண்ணில் நாள்தோறும் நடக்கின்ற விபத்து மரணங்கள் தொடர்பில் இவ்விடத்தில் பல தடவைகள் பிரஸ்தாபித்து விட்டோம். இருந்தும் எந்தப் பயனும் ஏற்படவில்லை.

அண்மையில் ஓய்வு பெற்ற அதிபர் ஒருவர் கிளிநொச்சியில் நடந்த விபத்தில் உயிரிழந்து போனார். அது தொடர்பில் கிளிநொச்சியில் ஓர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. அவ்வள வோடு அந்த விபத்துச் சம்பவம் முடிந்து போகும். இனி அடுத்த விபத்தை நோக்கிய பயணம் தொடரும் அவ்வளவுதான்.

என்ன செய்ய முடியும். இலஞ்சம் பெறும் போக்குவரத்துப் பொலிஸார் மிகப்பெரும் செல்வந்தர்களாகிவிட்டார்கள்.

அதிலும் குறிப்பாக வடமாகாணத்தில் இலஞ் சம் பெறுவதை இலக்காகக் கொண்டு போக்கு வரத்துப் பொலிஸாரில் ஒரு பகுதியினர் செயற் படுகின்றனர் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை.

இதை நாம் கூறும் போது, ஜனாதிபதி அநுர வின் ஆட்சியிலும் இலஞ்சமா? என்று நீங் கள் யாரேனும் கேட்கலாம்.

ஜனாதிபதி அநுர அல்ல, சாட்சாத் ஈஸ்வ ரன் நேரில் வந்தால் கூட, இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தில் தாண்டவமாடும் இலஞ் சத்தை ஒழிக்கவே முடியாது.

உண்மை. வடமாகாணத்தில் இத்துணை விபத்துக்கள் நடந்துள்ளன. இன்னும் விபத் துக்கள் நடக்கப்போகின்றன.

ஆனால் விபத்துக்களைக் குறைப்புச் செய் வதில் போக்குவரத்துப் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக விபத்துக்கள் அவர்களின் வியாபாரமா யிற்று.

ஆம், விபத்துக்கள் இடம்பெறும் ஒவ்வொரு தடவைகளும் பணம் இலஞ்சமாகப் பேரம் பேசப்படுகிறது. இதற்கென்ற தரகர்கள் அனைத்து இடங்களிலும் உள்ளனர்.

ஆக, விபத்துக்களை ஏற்படுத்தி எத்தனை மனித உயிர்களைக் காவு கொண்டாலும் இலஞ்சம் கொடுத்து தப்பிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை சண்டித்தனப் போக்குடைய சாரதிகளிடம் ஏற்பட்டுவிட்டது.

அதனாலேயே அவர்கள் மதுபோதையில் – கைத்தொலைபேசியில் உரையாடியபடி வாகனங்களைச் செலுத்துகின்றனர்.

இது தவிர, கள்ள மண்ணை ஏற்றிக் கொண்டு வேகமாக ஓடுவது. வீதிகளில் மோட்டார் சைக்கிள்களில் இளைஞர்கள் சாகசம் காட்டுவது. அதிவேகத்தில் வாகனங் களைச் செலுத்துவது. தனியார் மற்றும் வட பிராந்திய போக்குவரத்து சாலை பேருந்துகள் ஒன்றை ஒன்று முந்தியடித்துச் செல்வது என எல்லா நாசகாரங்களும் நடந்தாகின்றன.

இவற்றின் பின்னணியில் பொலிஸாரின் இலஞ்ச வேட்டை இருப்பதை இங்கு கூறித் தானாக வேண்டும்.

இங்குதான் விபத்துக்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்கள் மற்றும் விபத்தின் காரணம் என்பவற்றைத் தீர விசாரித்து, அந்த இடத்தில் வைத்து பொதுமக்கள் தக்க நடவடிக்கை எடுத்தால், விபத்துக்கள் சொன்ன மாத்திரத்தில் இல்லாது போகும்.

ஆம், பொதுமக்கள் தக்க நடவடிக்கை எடுக்காதவரை நம் மண்ணில் விபத்துக் களைத் தடுக்கவே முடியாது.

# தேனின் போர்வையில் சீனிப்பாணி விற்பனை

## வவுனியாவில் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட அதிரடிச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, விற்பனைக்காகத் தயார் படுத்தப்பட்டிருந்த 580 லீற்றர் சீனிப்பாணி (செயற்கைத் தேன்) கைப்பற் றப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றின் உரிமையாள ரான பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, வேப்பங் குளம், 8 ஆம் ஒழுங்கை, ஊர்மிளா கோட்டம் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலேயே இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள் ளது.

வவுனியா பிராந்திய சுகாதார வைத்திய அதி காரி வைத்தியர் சுரேந் திரனின் ஆலோசனை யின் கீழ் சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மே.ஜெயாவின் வழிப்ப டுத்தலில் நெளுக்குளம் பொதுச் சுகாதாரப் பரி சோதகர் ம.அன்ரன் தலைமையில் பூவரசன் குளம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் டிலுக்சன், கூமாங்குளம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பவிந்திரன், சாஸ்திரிகூ ழாங்குளம் பொதுச் சுகா தாரப் பரிசோதகர் துவா ரகன் ஆகியோர் பொலி ஸாரின் உதவியுடன் இணைந்து இந்நடவடிக் கையை மேற்கொண்டு ள்ளனர்.

குறித்த சுற்றிவளைப் பின் போது இவ்வீட்டில் சீனிப் பாணியினைக் காய்ச்சி, தேன் என நம்ப வைத்து விற்பனை செய்த முக்கிய நபர்கள் சம்பவ இடத்திலிருந்து தப்பி யோடிய நிலையில் வீட்டின் உரிமையாள ரான பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ந-7)

# காதல் விவகாரம் இளைஞன் கொலை

மாத்தறை மாவட்டம், வெலிகமை பிரதேசத் தில் தனியார் நிறுவன மொன்றில் பணிபுரிந்து வந்த இளம் உத்தியோ கத்தர் ஒருவர், நேற்று முன்தினம் சனிக்கிழமை கூர்மையான ஆயுதங்க ளால்வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூரச் சம் பவம் காதல் விவகாரம் காரணமாகவே அரங்கே றியுள்ளது என்று பொலி ஸாரின் முதற்கட்ட விசா ரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேற்படி சம்பவத்தில் வெலிபிட்டிய பிரதேசத் தைச் சேர்ந்த 27 வயது டைய இளைஞனே மிகக் கொடூரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதா வது,

வெலிகமை நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனமொன்றில் கட மையாற்றி வரும் குறித்த இளைஞன் நேற்று முன் தினம் தனது பணி நிமித் தமாக வீதியில் சென்று கொண்டிருந்த போதே, அங்கு மறைந்திருந்த ஆயுததாரிகளான இரு வரால் திடீரென வழிமறி க்கப்பட்டு சரமாரியாக வெட்டப்பட்டுள்ளார்.

கழுத்து மற்றும் உடற் பாகங்களில் பலத்த வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகிய அந்த இளை ஞன், அதிகளவிலான இரத்தப்போக்குக் கார ணமாக சம்பவ இடத் திலேயே உயிரிழந்துள் ளார்.

பொலிஸார் நடத்திய ஆரம்பகட்ட விசார ணைகளின்படி, உயிரி ழந்த இளைஞனுக்கும் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக் கும் இடையில் நிலவி வந்த நீண்டகாலக் காதல் விவகாரம் மற்றும் அத னால் ஏற்பட்ட தனிப் பட்ட குரோதமே இந்தத் திட்டமிட்ட படுகொலை க்குப் பிரதான காரணம் எனப் பொலிஸார் தெரி வித்தனர். (ந-7)

# மாயமான துப்பாக்கி கைதான ஓ.ஐ.சி

தன்னுடைய உத்தி யோகபூர்வ துப்பாக்கி காணாமல் போனமை தொடர்பாக, யடியந்தோட்டை பொலிஸ் நிலைய த்தின் போக்குவரத்து பிரிவுக்குப் பொறுப்பான பொறுப்பதிகாரி (ஓ.ஐ.சி) சீதாவாக்கை குற்றப்புல னாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள் ளார்.

கடந்த 26ஆம் திகதி குறித்த பொறுப்பதிகாரி கடமை நிமித்தம் வெளி யில் சென்ற போது, பிஸ் டல் வகை துப்பாக்கி ஒன் றையும் 10 தோட்டாக்க ளையும் எடுத்துச் சென் றுள்ளார். எனினும் மீண் டும் அந்தத் தோட்டாக் களை அவர் ஒப்படைக் கவில்லை என்று தெரி விக்கப்படுகிறது.

இதற்கமைய விசார ணைகளை மேற்கொ ண்ட சீதாவாக்கை குற்றப் புலனாய்வுப் பிரி வின் அதிகாரிகள், யடியந்தோட்டை பொலிஸ் நிலையத்தின் போக்கு வரத்துப் பிரிவு ஓ.ஐ.சி ஆகக்கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோத கரைக் கைது செய்துள் ளனர். (ந-7)

# கட்டுநாயக்க ஊடாக போதைவஸ்து கடத்தல்

## பொலிஸாரால் முறியடிப்பு

(நீர்கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக 7 கோடியே 22 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹசீஸ் மற்றும் குஷ் போதைப்பொருட்களை நாட்டிற்குள் கடத்த முற் பட்ட 5 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

அவர்கள் கட்டுநாய க்க விமான நிலையத்தி லிருந்து நேற்று (28) அதிகாலை வெளியேற முற்பட்ட போது, விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் ஒழி ப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கேகா லைப் பகுதியைச் சேர் ந்தவர்கள் என்பதுடன் அவர்கள் நேற்று அதி காலை 4.30 மணியள வில் தாய்லாந்தின் பாங் கொக் நகரிலிருந்து கட் டுநாயக்க விமான நிலை யத்தை வந்தடைந்துள் ளமை தெரியவந்துள் ளது.

இதன்போது அவர் கள் ஒரு புதிய உத்தி யைக் கையாண்டு 6 கிலோகிராம் 110 கிராம் ஹசீஸ் போதைப்பொரு ளையும் 11 கிலோகிராம் 62 கிராம் குஷ் போதை ப்பொருளையும் 15 கண் ணாடிப் போத்தல்களுக் குள் அடைத்து அவ ற்றை கட்டுநாயக்க விமான நிலையத்திலு ள்ள இலங்கை தீர்வை யற்ற வர்த்தக வளாகத் தின் பெயர் அச்சிடப்ப ட்ட பொலித்தீன் பைக ளில் மறைத்து எடுத்து வந்துள்ளமையைப் பொலிஸார் கண்டறிந் தனர். இதையடுத்தே அவர்கள் கைது செய்ய ப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மேல திக விசாரணைகளின் பின் நீர்கொழும்பு நீதி வான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# பலாலியில் காணி விடுவிப்புக்கோரி மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம் - பலாலி யில் இராணுவம் கைய கப்படுத்தி வைத்திருக் கும் காணிகளை மீள ஒப் படைக்கக்கோரி, பிர தேச மக்கள் நேற்று (28) ஞாயிற்றுக்கிழமை கவன யீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பலாலி உதயகலை வாணி மக்கள் ஒன்றியத் தின் ஏற்பாட்டில் நடை பெற்ற குறித்த போராட் டமானது நேற்றுக் காலை 8.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தங்களது பூர்வீக நிலங்களை இழ ந்து 36 ஆண்டுகளாக வாழ் ந்து வருவதாகக் குறிப் பிட்ட காணி உரிமையா ளர்கள் விரைவில் காணி களை மீள ஒப்படைக்க வலியுறுத்தி "எங்கள் நிலம் எங்களுக்கு வேண் டும்", "அடக்குமுறைக்கு அஞ்சமாட்டோம்", "எங் கள் நிலங்களை விடமா ட்டோம்", "நிலமே எங்கள் மூச்சு அது இல்லை யேல் வாழ்வு போச்சு", "அரசே, இராணுவத்தை வெளியேற்று மக்கள் குடி யேற வழிவகை செய்" போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுலோக அட்டைகளை கைகளில் ஏந்தியவாறு ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர். (ந-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## ஹீமோகுளோபினை அதிகரிக்கக்கூடிய பாரம்பரிய உணவு வகைகள்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஆரம்பத்தில் ஹீமோகுளோபின் தேவைகள் உடம்பிற்கு என்ன என்று கூறினால், இதில் இரண்டு விடயங்கள் உண்டு. ஒன்று HAEM மற்றயது குளோபின் (globin) HAEM என்றால் அயன் என்றும் குளோபின் என்பது புரதமூலக்கூறையும் குறிக்கும்.

இது இரண்டும் சேர்த்து தான் ஹீமோகுளோபின் ஆகும். எனவே ஹீமோகுளோபினை நேரடியாக அதிகரிக்கும் உணவுகளை காட்டிலும் அயன் அதிகமுள்ள உணவுகளையும், புரதம் அதிகமுள்ள உணவுகளையும் சேர்த்து எடுத்தக்கொள்ளும் போது ஹீமோகுளோபின் அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் உண்டு. இவ் சத்துள்ள உணவுகளை எடுத்தால் மட்டும் போதாது இவ் சத்துக்கள் அதிகரிக்க கூடிய உயிர்ச்சத்து C சேர்ந்த உணவுகளை அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும். அடுத்து உயிர்ச சத்து B9 இதனை வோலேற்று எனக் குறிப்பிடுவோம்.

இதுவும் அயன்செறிவான சத்தாகும். அத்துடன் விற்றமின் B12 சேர்ந்த உணவுகள் இரத்த சிவப்பு அணுக்கள் முதிர்ச்சியடையத் தேவை. எனவே ஹீமோகுளோபின் குறைபாடு உடையவர்கள் அயன், உயிர்ச்சத்து C, B9, B12 மற்றும் புரத உணவுகளை சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டும். முதலாவதாக அயன் மற்றும் குளோபின் அதிகமுள்ள உணவுகளை எடுத்துக் கொண்டால் மட்டும் போதாது எமது உடலின் அனுசேபம் சரியாக இருத்தல் வேண்டும். அதாவது உணவின் சமிபாடு, வெளியேறும் சிறுநீர் அளவு, வியர்வை இவைகள் சீராக இருத்தல் வேண்டும். அத்துடன் சீரான உடற்பயிற்சி போன்றவை ஹீமோகுளோபின் அகத்துறிஞ்சலையும் தூண்டும்.



எனவே மொத்தத்தில் சிவப்பு அணுக்களை அதிகரிக்கக்கூடிய B9 அதாவது வோலேற்று சத்துள்ள உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும். நிறையப் பேர் நினைக்கலாம் இவ்வளவு சத்துள்ள உணவுகளை தெரிவு செய்து சாப்பிடுவதைக் காட்டிலும் மாத்திரைகளாக எடுக்கலாமே என்று, மாத்திரைகள் முதலில் உடம்பால் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக மலக்கட்டு, வயிற்றுப்புண் (Gastritis) இன்னும் பல பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். உணவாக எடுத்துக் கொள்ளும் போது இயற்கையாகவே எமது உடம்பால் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை நினைவில் வைத்தக் கொள்ள வேண்டும். அயன் அதிகமுள்ள உணவுகளான மாதுளை, உலர்திராட்சை, அத்திப்பழம், பேரீச்சம்பழம், மரக்கறி வகைகளுள் கீரை வகைகள், எல்லா வகையான கீரையிலும் அயன் சத்து உண்டு. முக்கியமாக முருங்கைக்கீரை, அறக்கீரை, தவசி முருங்கை, பருப்புக்கீரை, அகத்தி போன்றவற்றை குறிப்பிடலாம். பீற்றூட் மரக்கறியின் நிறைய வோலேற்று சத்து உடம்பிற்கு கிடைக்கின்றது. அதே போல் விதைகளிலிருந்து நிறைய அயன் சத்து கிடைக்கிறது. எள்ளு, பூசணி விதை அதிகம் உண்டு. அதே போல் சுண்டல் வகைகளில் அயனும், குளோபின் மூலக் கூறும் அதிகளவில் உண்டு.

சோயாபீன், பருப்பு வகைகள் எல்லாம், கொண்டல் கடலை போன்றவற்றில் குளோபின் அளவு அதிகமாகக் கிடைக்கும். அதே போல் அசைவ உணவு எடுத்துக் கொள்பவர்களுக்கு தினசரி ஒரு முட்டை சாப்பிடும் போது அயனாக இருக்கட்டும் இரண்டு சத்துக்களும் முட்டையில் சேர்ந்து கிடைக்கின்றது. பால், ஈரல் போன்றவற்றையும் சாப்பிடலாம். நிலக்கடலையிலும் அயன்சத்து கிடைக்கிறது. எனவே மேற்கூறியவற்றை நீங்கள் உங்கள் உணவுகளில் கட்டாயமாக சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆப்ரிகொட்(குமழிப்பழம்) பழத்திலும் அதிகளவு அயன் சத்து உண்டு.

உயிர்ச்சத்து C அதிகமுள்ள உணவுகளான நெல்லிக்காய், எலுமிச்சை, நாரத்தை, தோடம் பழம், தக்காளி, குடைமிளகாய், கொய்யாக்காய், அன்னமுன்னா, வில்லம்பழம், போன்றவற்றை உயிர்ச்சத்து C இற்காக எடுத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் முக்கியமான விடயம் உங்களுக்கு ஹீமோகுளோபின் அளவு குறைவாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் உடலில் இரும்புச்சத்து உட்பிரவேசிப்பதை தடுத்திடும் உணவுகள் உண்பதைத் தவிர்க்க வேண்டும்.

பாலிபினால்கள், டானின்கள், மற்றம் ஒட்சாலிக்கமிலம் நிறைந்த ஹீமோகுளோபின் உட்பிரவேசிப்பதை தடுக்கும் உணவுகள் எடுத்துக் கொள்வதை மட்டுப்படுத்த வேண்டும். அதாவது தேநீர், கோப்பி, கொக்கோ, அல்கேகால், போன்றவை ஆகும். வெள்ளைச் சீனிக்குப் பதிலாக கருப்பட்டி, பனங்கட்டி, கல்லாக்காரம், அல்லது பனை வெல்லம் போன்றவற்றைப் பயன்படுத்தும் போது அயன் சத்து அதிகமாகக் கிடைக்கின்றது.

சிறுதானிய உணவுகளில் திணை,குரக்கன், கம்பு போன்ற சிறுதானியங்களைப் பயன்படுத்தும் போது ஹீமோகுளோபின் அதிகரிக்க அதிக வாய்ப்பு உண்டு. மரக்கறி வகைகளில் சுண்டங்கத்தரிக்காய் அல்லது அதன் வற்றல்களை சமைத்துச் சாப்பிடும் போது ஹீபோகுளோபின் சத்து அதிகரிக்க அதிக வாய்ப்புக்கள் உண்டு. அசைவ உணவு எடுப்பவர்கள் மீன், இறால் போன்றவற்றை எடுப்பதன் மூலம் இரத்தத்தின் ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கச் செய்யலாம்.

ஹீமோகுளோபின் குறைவதற்கு பல காரணங்கள் உண்டு. முக்கியமான காரணங்களில் ஒன்று தவறான உணவு. இதை நீங்கள் கவனிக்காவிட்டால் உங்களை மந்தமாகவும் பலவீனமாக்கவும் கூடும். எமது முன்னோர்கள் எள்ளு, முளை கட்டிய தானிய உணவுகள் பாரம்பரியமான கீரைகள், பழங்கள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஆரோக்கியமாக வாழ்ந்துள்ளார்கள்.மேற்கூறிய உணவு வகைகள் எமது பிரதேசத்தில் கிடைக்கக் கூடியவையே.

# இராசிபலன்

29.06.2026
ஆனி 15, திங்கட்கிழமை
பூரணை முழுவதும்

மூலம் பின்னிரவு 5.04 மணிவரை
சுப நேரம் 11.56-1.26 மணிவரை
இராகு காலம் -7.26-8.56மணிவரை


சந்திராஷ்டமம்-
ரோகிணி

வளவன்



**மேஷம்**

வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் காண வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் நாள், பயணங்கள் இடம் பெறலாம்



**ரிஷபம்**

குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண் பாடுகள்தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வெளியூர் பயணங்களால் மனச் செறிவு ஏற்படலாம்.




**மிதுனம்**

நண்பர்கள் சந்திப்பால் ஒரு சில நன்மைகள் ஏற்படலாம், வீட்டு உபயோகப்பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.



**கடகம்**

எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், சுபநிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்




**சிம்மம்**

பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்.




**கன்னி**

காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், இல்லத்தில் சுகங்களும் சந்தோஷமும் குறையும், கடன் சுமை குறையும் நாள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.



**துலாம்**

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உடன்பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு




**விருச்சிகம்**

வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள் விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.




**தனுசு**

சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், உடல் நலனில் கவனம் தேவை, குடும்பத்தினரை அனுசரித் துச் செல்வது நல்லது, எதிர்பாராத காரியமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.



**மகரம்**

தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.



**கும்பம்**

எடுத்த காரியங்கள் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பொது வாழ்வில் கௌரவம் கூடும்.



**மீனம்**

மற்றவர்கள் மத்தியில் உங்கள் மதிப்பும் மரியாதையும் உயரும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வீடு கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## அதிகரிக்கும்...

என்பதுடன், கடல் பகுதிகள் கொந்தளிப்பாகக் காணப்படலாம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

அத்துடன் சிலாபத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடலோரப் பகுதிகளில் கடல் அலைகள் சுமார் 2.0 - 3.0 மீற்றர் வரை உயர்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் அந்த அறிவித்தலில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து அவதானத்துடன் செயற்படுமாறும் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவிப்புகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந-7)

## முன்னைய...

பாதாள உலகக் குழு உறுப்பினர்களிடமிருந்து முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஷ ராஜபக்ஷவின் மகன் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் ஆகியோர் பல கோடி ரூபா இலஞ்சம் பெற்றுள்ளனர் எனக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் ஒரு குற்ற இராஜ்ஜியத்தைக் கட்டியெழுப்புவதற்காகவே முன்னாள் ஆட்சியாளர்கள் பல்வேறு சூழ்ச்சிகளைச் செய்துள்ளனர்.

ஆபத்தான போதைப்பொருள் குற்றவாளிகளைச் சட்டத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காக இவர்கள் பலகோடி ரூபா இலஞ்சம் வாங்கியுள்ளனர். இதுதான் அவர்கள் கடந்த காலத்தில் கட்டியெழுப்பிய சீரழிந்த அரசியல் கலாசாரமாகும்.

கடந்தகால ஆட்சியாளர்கள் செய்த இத்தகைய சூழ்ச்சிகள் இப்போது ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கியுள்ளன. இவற்றை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மூடிமறைப்பதற்கு இந்த அரசு ஒருபோதும் இடமளிக்காது.

அம்பலமாகியுள்ள அனைத்துச் சம்பவங்கள் தொடர்பிலும் பாரபட்சமின்றி முழுமையான விசாரணைகள் நடத்தப்பட்டு, நாட்டில் சட்டத்தின் ஆட்சி மிகச்சரியாக நிலைநாட்டப்படும்.

அநீதிகளுக்கு எதிராகச் செயற்படுவதற்காகவே நாட்டு மக்கள் எமக்குத் தெளிவான ஆணையை வழங்கியுள்ளனர் என்றார். (ந-7)

## ஒழுங்குபடுத்த...

குறிகாட்டுவானில் இருந்து அடியார்களை படகுகளில் ஏற்றிச் செல்வதில் போதிய ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இதனால் நேற்று அதிகாலையில் குறிகாட்டுவானுக்குச் சென்றவர்களை பின்னால் வந்தவர்கள் முண்டியடித்துக் குழப்பம் செய்தனர்.

இதனால் குறிகாட்டுவான் இறங்கு துறைப் பகுதியில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது.

இதுதவிர, குறிகாட்டுவான் வீதி புனரமைக்கப்பட்டுவரும் நிலையில் வீதியில் பாதசாரிகள் நடந்து செல்கின்ற இடங்களில் பாதுகாப்பற்ற மின் வயர்கள் பொருத்தப்பட்டிருந்ததாகவும் அங்கு ஏற்பட்ட நெருக்கடி காரணமாக வீதியில் பொருத்தப்பட்டிருந்த அனைத்து ரியூப் லைற்றுக்களும் நொருங்கி விழுந்ததாகவும் பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒழுங்கான வரிசைகள் இன்மையாலும் உத்தியோகத்தர்கள் போதுமான அளவு சேவையில் ஈடுபடாத காரணத்தாலும் பொலிஸார் மற்றும் கடற்படையினர் உரிய சேவைகளை வழங்காததன் காரணமாகவும் நயினாதீவு நாகபூசணி அம்மனின் தேர்த் திருவிழாவுக்குச் சென்ற பக்தர்கள் சொல்லொணா கஷ்டங்களைச் சந்திக்க நேர்ந்தது.

இதேவேளை பௌத்த விகாரைக்குச் செல்கின்றவர்களை வரிசைக்குட்படுத்தாமல், அவர்களை சுயாதீனமாகப் பயணிக்க அனுமதித்தமையும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியதாகப் பலரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேவேளை நயினாதீவு நாகவிகாரையின் [illegible] மான படகும் பக்தர்களை ஏற்றி இறங்கும் பணியில் ஈடுபட்டதால், வழமையாகப் படகு சேவையை நடத்துகின்றவர்கள் விசனமடைந்ததாகவும் இதன் காரணமாகவும் படகுச் சேவை குழப்பமுற்றதாகவும் கூறப்படுகிறது.

கடந்த காலங்களை விட இம்முறை பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையும் அதற்கேற்றவாறு ஒழுங்குபடுத்தல்கள் செய்யப்படாமையும் பக்தர்கள் அசௌகரியங்களைச் சந்திக்க நேரிட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-7)

## 427 தீப்பந்தங்கள்...

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிப் பகுதியில் இருந்து 412 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் "அணையா விளக்காக மீண்டும் ஒன்றிணைவோம்" என்ற தொனிப்பொருளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தீப்பந்தப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

செம்மணிப் பகுதியிலுள்ள அணையா விளக்குத் திடல் பகுதியில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமைமாலை 4 மணி யளவில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது அணையா விளக்கு தூபிக்கு மலர்மாலை அணிவித்து, ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து, செம்மணி மனிதப் புதை குழியில் தற்போது முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளில் இதுவரையில் 412 என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 1999ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது, மீட்கப்பட்ட 15 என்புக் கூடுகளுமாக 427 என்புக் கூடுகளை நினைவுறுத்தி, 427 தீப்பந்தங்கள் செம்மணி வளைவுப் பகுதியில் ஏற்றப்பட்டு அமைதி வழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ந-7,33)

## அமைச்...

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று (28) ஞாயிற்றுக்கிழமை அனலைதீவுக்கு விஜயம் செய்தார்.

இதன்போது அங்குள்ள பிரதேச வைத்தியசாலைக்கு கண்காணிப்பு விஜயமொன்றினையும் அமைச்சர் மேற்கொண்டிருந்தார்.

இதனபோது மருத்துவ விநியோகம், மருத்துவ உபகரணங்கள், மனித வளம், அவசர போக்குவரத்து, மகப்பேறு மற்றும் சிறுவர் சுகாதார சேவைகள், தொற்று மற்றும் தொற்று அல்லாத நோய் கட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பில் அமைச்சர் வைத்தியசாலையின் வைத்தியர்கள், ஏனைய சுகாதார ஊழியர்கள் மற்றும் உள்ளூர்வாசிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சமன் பத்திரன ஆகியோர் உடனிருந்தனர். (ந-7)


மஹஜன சம்பத — திகதி 2026.06.28 — சீட்டிழுப்பு இலக்கம் 6232 — G 5 6 7 1 8 8
அத சம்பத — G 7 1 8 8 — சீட்டிழுப்பு இலக்கம் 0807

சுப தவசக் — திகதி 2026.06.28 — சீட்டிழுப்பு இலக்கம் 8348 — இடபம் 11 37 62 — 2340

தன நிதானய — திகதி - 2026.06.28 — சீட்டிழுப்பு இலக்கம் - 2262 — D 13 25 69 82 D — ஞாயிறு போனஸ் இலக்கம் 3575

மெகா பவர் — திகதி 28/06/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2580 — V 11 10 17 27 63

ஜய — திகதி 2026.06.28 — சீட்டிழுப்பு இலக்கம் 0500 — K 4 5 0 5 — ஞாயிறு போனஸ் இலக்கம் 1366

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4474 — சீட்டிழுப்பு திகதி 28.06.2026 — K 28 39 69 79

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.06.28 — சீட்டிழுப்பு இலக்கம் 1541 — கடகம் 09 37 47 61 கடகம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 28.06.2026 — வெற்றி வாரம் 0940 — Q 3 8 9 2 7 5 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,649,080.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3206 — 25000 பணப் பரிசு 35154 — சீட்டிழுப்பு திகதி 2026.06.28 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 11 31 35 61 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,598,525.60

சனிதா — திகதி 28.06.2026 — வெற்றி வாரம் 5367 — 12 57 65 77 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,538,380.00 — செகண்ட் சான்ஸ் ரூ. 50,000/- 71155

சசிரி — வெற்றி வாரம் 1036 — சீட்டிழுப்பு திகதி 28.06.2026 — ஞாயிற்றுக்கிழமை — 10 21 47 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,415,440.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4918 — சீட்டிழுப்பு திகதி 28.06.2026 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 04 14 18 56 துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,626,758.40

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — Y 13 01 16 47 70 — 2382 — 28.06.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.304,377,157.00

அத கோடிபதி — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 3032 — சீட்டிழுப்பு திகதி 2026.06.28 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,484,611.20 — 20 52 68 71 E


Digitized by Noolaham Foundation. noolaham.org | noolaham.media

## செம்மணியில்...

மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் நீதிமன்றால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தனது மனைவியூடாகக் குறித்த புதிய தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன் சிறைச்சாலைக்குள் இருந்து இவை பற்றிய மேலதிக விபரங்களை வெளிப்படுத்தும் பட்சத்தில் தனது பாதுகாப்புத் தொடர்பில் பல்வேறு அச்சுறுத்தல்கள் காணப்படுவதாகவும், எனவே தன்னை ஒரு சுயாதீன சாட்சியாளராக விடுவித்துக்கொள்ளவேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அவரது மனைவி, ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்திற்கு அமைய காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான விசாரணை ஆணைக்குழு கடந்த ஆண்டு சோமரத்ன ராஜபக்ஷவை சிறையில் சந்தித்திருந்தது.

இதன்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கான கடிதமொன்றை அதிகாரிகளிடம் கையளித்த சோமரத்ன ராஜபக்ஷ, செம்மணி மனிதப்புதைகுழி மற்றும் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினரால் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தப்பட்ட மீறல்கள் தொடர்பில், தான் ஏற்கெனவே அனுப்பிவைத்திருந்த கடிதத்தின் ஊடாகவும், அதன் பின்னரும் பல்வேறு உண்மைகளை வெளிப்படுத்தியிருந்த போதிலும், அவை குறித்து தற்போதுவரை எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை எனவும், இவ்விடயம் தொடர்பில் சுயாதீன குழுவொன்றை நியமித்து முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் அதில் அவர் கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறு இருக்கையில், அண்மையில் செம்மணி மனிதப் புதைகுழிப்பகுதிக்கு களவிஜயம் செய்த நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார, செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான உண்மைகளை சோமரத்ன ராஜபக்ஷ வெளியிடுவதாக இருந்தால் அவர் தனக்கு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளார் எனக் குறிப்பிட்டிருந்தமை தெரிந்ததே. (ந-7)


### வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42 வது லேனில் இரண்டு அறைகள், இணைந்த குளியலறையுடன் கூடிய தொடர்மாடி வீடு, அறைகள் மாத, நாள் வாடகைக்குண்டு. (7934)

075 278 6033


## தொல்புரத்தில்...

தாக்குதலை மேற்கொண்ட நபர் ஏற்கெனவே வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,104)

## அரச உதவித்...

வலுவூட்டல் அமைச்சின் கீழ் உள்ள தேசிய முதியோர் செயலகம், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து முன்னெடுக்கப்படுகின்றது.

தற்போது 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட தகுதியுள்ள முதியவர்களுக்கு மாதந்தோறும் ரூ. 5,000 உதவித்தொகையை அரசாங்கம் வழங்கி வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 10 இலட்சம் பயனாளிகள் இணைக்கப்பட்டுள்ள நிலையில், தகுதியுள்ளவர்களில் சுமார் 76,716 பேர் தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் இந்த உதவித்தொகையைப் பெற முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாகவே இந்த விசேட திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாததால் உதவித்தொகை பெற முடியாத முதியவர்கள், உடனடியாகத் தமது கிராம உத்தியோகத்தர், சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் அல்லது முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தரைத் தொடர்பு கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந-7)


### வீடு வாடகைக்கு

மானிப்பாய் உடுவில் வீதியில் மருதடிச் சந்தியிலிருந்து 1 கிலோமீற்றர் தூரத்தில் சகல வசதிகளுடன் கூடிய, நான்கு அறைகள் உடைய வீடு வாடகைக்கு உண்டு.
(உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது)

மேலதிக தகவல்களுக்கு :
077 400 4792
077 724 6352
(2461)

### காணி விற்பனைக்கு


வவுனியாவில் வைரவபுளியங்குளத்தில் 10 பரப்பு அறுதி உறுதிக் காணியும், கணேசபுரத்தில் 1.5 ஏக்கர் உறுதிக் காணியும் விற்பனைக்கு உண்டு. (2460)

தொடர்புக்கு
077 524 5913


## மரண அறிவித்தல்

# A.N.S திருச்செல்வம்

**(கலாபூஷணம், ஊடகமாமணி, மூத்த பத்திரிகையாளர், ஓய்வுநிலை பொது நூலகர் பருத்தித்துறை பிரதேச சபை)**



பருத்தித்துறை வராத்துப்பளையினைப் பிறப்பிடமாகவும் புற்றளையினை வசிப்பிடமாகவும் கொண்ட A. N. S. திருச்செல்வம் அவர்கள் கடந்த (25.06.2026) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சாந்தாதேவி அவர்களின் அன்புக் கணவரும் அருணா (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேசசெயலகம் வடமராட்சி கிழக்கு), சிவதேவன்(பிரான்ஸ்), அபிரா (வைத்தியர்-ஆதார வைத்தியசாலை-பருத்தித்துறை), கிரிசா (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட நீதிமன்றம் - பருத்தித்துறை), துவாரகன்(உதவி அஞ்சல் அதிபர்-வல்வெட்டித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரமோகன் (இலங்கை முதலீட்டுசபை-யாழ்ப்பாணம்), நிருஷா(பிரான்ஸ்), டினேஸ்குமார் (வைத்தியர்-பெலாறஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சறோஜினிதேவி, யோகேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவரான சூரியகுமாரி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நேகா(பிரான்ஸ்), ஷக்ஸி (பிரான்ஸ்), அஸ்விதன்(புற்றளை), அஷ்மிதன்(புற்றளை) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2026) செவ்வாய்க் கிழமை மு.ப 07.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் ஆனை விழுந்தான் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புற்றளை,
புலோலி.

தகவல் : குடும்பத்தினர்
(தி.துவாரகன் மகன் - 076 735 3106)
(C-5944)


### வெறுப்பை நிராகரித்து மனிதநேயத்தை உயர்த்துவோம்

ஒவ்வொரு தகவலும் பகிரப்பட வேண்டியது அல்ல.

தீர்மானத்தை மீறிய உணர்ச்சிகளால் வெறுப்பான தகவல்கள் வேகமாக பரவுகின்றன.

மக்களை உயர்த்தும், சமூகங்களை வலுப்படுத்தும் மற்றும் மரியாதையை வளர்க்கும் தகவல்களை தெரிவு செய்து பகிருங்கள்.

நாம் விழிப்புணர்வுடன் வெறுப்பை நிராகரிப்போம்.

இந்த செய்தி SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது. (7775)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

38 ஆவது வருடாந்த கல்விச் சேவையில்...

### நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு அமைய

O/L DAY CLASS

யாழ் நகரின் NO.01 கல்வி நிறுவனம்

ஆரம்பம் 29.06.2026 திங்கள் காலை 08.30

- தனிப்பட்ட கவனிப்பு
- அலகுப் பரீட்சைகள் நடைபெறும்
- PAPER CLASS நடைபெறும்

அனுமதிகளை உங்களுடைய பெற்றோர்களுடன் வருகை தந்து பெற்றுக்கொள்ளவும்

இன்று முதல் அனுமதிகள் வழங்கப்படுகிறது. (C-5946)

மேலதிக விபரங்களுக்கு : 077 459 8440


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org